



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 225 28.03.2026 சனிக்கிழமை

Chennai Volume: 01 Issue: 225 Saturday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

சனிக்கிழமை
(28-03-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-14
பிறை: வளர்பிறை
திதி
தசமி காலை 11.03 வரை
பிறகு ஏகாதசி.
நட்சத்திரம்:
பூசம் மாலை 4.46 வரை
பிறகு ஆயில்யம்
யோகம்
சித்த/மரணயோகம்
ராகுகாலம்
காலை 9.00-10.30 மணி
எமகண்டம்
நண்பகல் 1.30-3.00 மணி.
சூலம் - கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி.
மாலை 5-6 மணி.

| | |
|---|---|
| மேஷம் | உயர்வு |
| ரிஷபம் | வெற்றி |
| மிதுனம் | சுகம் |
| கடகம் | வரவு |
| சிம்மம் | மகிழ்ச்சி |
| கன்னி | போட்டி |
| துலாம் | நிறைவு |
| விருச்சிகம் | ஆதரவு |
| தனுசு | கடமை |
| மகரம் | பாராட்டு |
| கும்பம் | அமைதி |
| மீனம் | சுபம் |

# இந்தியாவில் 60 நாள்களுக்குத் தேவையான பெட்ரோல்-டீசல் கையிருப்பு : மத்திய அரசு

**புதுடில்லி, மார்ச் 28:**

'நாட்டின் எந்தப் பகுதியிலும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு இல்லை; அடுத்த 60 நாள்களுக்குத் தேவையான பெட்ரோல்-டீசல் மற்றும் கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது' என்று மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வியாழக்கிழமை விளக்கமளித்தது.

எல்பிஜி சமையல் எரிவாயுவை பொருத்தவரை, அடுத்த ஒரு மாதத்துக்குத் தேவையான விநியோகம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு பீதியில், பெட்ரோல் நிலையங்களுக்கு மக்கள் படையெடுப்பதாக தகவல்கள் வெளியான நிலையில், மேற்கண்ட விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு என்ற கூற்றை நிராகரித்துள்ள மத்திய அரசு, இது உள்நோக்கம் கொண்ட பொய் பிரசாரம் என்று சாடியுள்ளது.



இது தொடர்பாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

உலக அளவில் எண்ணெய் சுத்திகரிப்பில் 4-ஆவது பெரிய நாடாகவும், பெட்ரோலியப் பொருள்கள் ஏற்றுமதியில் 5-ஆவது பெரிய நாடாகவும் உள்ள இந்தியா, உள்நாட்டில் எரிபொருள் இருப்பை உறுதி செய்துள்ளதுடன், 150-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான விநியோகத்தையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

பெட்ரோல்-டீசலுக்கு கட்டுப்பாடு இல்லை: நாடு முழுவதும் உள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பெட்ரோல் நிலையங்கள் போதுமான இருப்புடன் வழக்கம் போல் செயல்பட்டு வருகின்றன. பிற நாடுகளைப் போல, பெட்ரோல்-டீசல் விநியோகத்தில் எவ்விதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. வாகன இயக்கத்துக்கு கட்டுப்பாடு, பெட்ரோல் நிலையங்கள் கட்டாய மூடல், 'தேசிய அவசரநிலை' போன்ற நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளவில்லை.

அதேநேரம், உடனடியாகப் பணம் செலுத்தி, பெட்ரோல்-டீசல் கொள்முதல் செய்யும் நடைமுறையை எண்ணெய் நிறுவனங்கள் அமலாக்கியுள்ளதால், சிறிய நகரங்களில் உள்ள சில பெட்ரோல் நிலையங்கள் சிரமத்தை எதிர்கொண்டுள்ளன. இந்த விவகாரத்துக்குத் தீர்வுகாண நடவடிக்கைளடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களும் முழுத் திறனுடன் இயங்கி வருகின்றன. பெட்ரோலியப் பொருள்கள் மற்றும் எல்பிஜி விநியோகம் முழுப் பாதுகாப்புடன் உள்ளது.

60 நாள்களுக்கான கையிருப்பு: மேற்காசிய நெருக்கடியின் 27-ஆவது நாளில் நாம் இருக்கும் நிலையிலும், அடுத்த 60 நாள்களுக்குத் தேவையான எரிபொருள்கள் கையிருப்பு உள்ளது. இதில், கச்சா எண்ணெய் இருப்புகள், சுத்திகரிக்கப்பட்ட பொருள்களின் இருப்புகள், பூமிக்கடியில் சேமிக்கப்பட்டுள்ள உத்திசார் கையிருப்புகள் உள்ளடங்கும்.

உலக அளவில் என்ன நடந்தாலும், இந்தியாவில் ஒவ்வொரு குடிமகனுக்கும் அடுத்த 2 மாதங்களுக்குத் தேவையான எரிபொருள்களின் சீரான விநியோகத்தை மேற்கொள்ள முடியும். இதுதவிர அடுத்த 2 மாதங்களுக்குத் தேவையான கச்சா எண்ணெய் கொள்முதலையும் எண்ணெய் நிறுவனங்கள் உறுதி செய்துள்ளன. எனவே, மேலும் பல மாதங்களுக்கு பாதிப்பு இருக்காது.

ஹோர்முஸ் நீரிணை பதற்றங்களுக்கு மத்தியில், கச்சா எண்ணெய் கொள்முதலில் சீரான தன்மை பராமரிக்கப்படுகிறது. 41-க்கும் மேற்பட்ட நாடுகளிடம் இருந்து கூடுதலாக கொள்முதல் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, விநியோகத்தில் எவ்வித இடைவெளியும் இல்லை என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி அதிரடியாக குறைப்பு

**புது டில்லி, மார்ச் 28:**

கலால் வரி குறைப்பால் பெட்ரோல், டீசல் விலை குறையுமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் போர் காரணமாக உலகின் ஐந்தில் ஒரு பங்கு கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருள்களை கொண்டு செல்லும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியுள்ளது.

இதன் காரணமாக நாளொன்றுக்கு 120 கப்பல்கள் 2.5 கோடி பீப்பாய்கள் கச்சா எண்ணெய்யை அவ்வழியாக எடுத்துச் செல்லும் நிலையில், தற்போது நட்பு நாடுகளின் ஓரிரு கப்பல்களை மட்டுமே ஈரான் அனுமதித்து வருகிறது. இதனால், உலகளாவிய எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கச்சா எண்ணெய் விலையும் வரலாறு காணாத உச்சமாக ஒரு பீப்பாய் 119 டாலரைத் தொட்டு, தற்போது சற்று குறைந்து 100 டாலராக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், டீசல் மீதான கலால் வரி ரூ. 10-ஐ முழுமையாக ரத்து செய்தும், பெட்ரோல் மீதான வரியை லிட்டருக்கு ரூ. 13-ல் இருந்து ரூ. 3 ஆகவும் மத்திய நிதியமைச்சகம் இன்று குறைத்துள்ளது.

கச்சா எண்ணெய் தொடர் ஏற்றத்தை அடுத்து, ப்ரீமியம் பெட்ரோல் விலையை லிட்டருக்கு ரூ. 2 உயர்த்துவதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்திருந்தன.



இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்கள் மத்திய அரசு கேட்டுக் கொண்டதை அடுத்து, தற்காலிக இழப்பை ஏற்றுக் கொண்டு கடந்த ஒரு மாதமாக விலை ஏற்றத்தை தவிர்த்து வருகின்றன.

இதனிடையே, நயாரா நிறுவனம் பெட்ரோல் விலையை லிட்டருக்கு ரூ. 5-ம், டீசலுக்கு ரூ. 3-ம் உயர்த்துவதாக வியாழக்கிழமை அறிவித்திருந்தது.

தொடர்ந்து, மற்ற எண்ணெய் நிறுவனங்களும் விலையை ஏற்றும் என்று நாடு முழுவதும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, எண்ணெய் நிறுவனங்களின் விலை ஏற்ற யோசனையைத் தவிர்க்க அவர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில், கலால் வரியை மத்திய அரசு குறைத்துள்ளது.

இதனால், பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும் பெட்ரோல், டீசல் விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

# தவெக பெண்கள் குறித்து சர்ச்சை பேச்சு

## டிஜிபி அலுவலகத்தில் விஜய் புகார்

**சென்னை, மார்ச் 28:**

தவெக குறித்து பேசியிருக்கும் வீடியோவில் கட்சியின் பெண்கள் குறித்து அவதூறாகப் பேசியதாகக் கூறப்படுகிறது. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இந்நிலையில், பொன்ராஜ் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி தவெக தலைவர் விஜய், டிஜிபி அலுவலகத்தில் நேற்றிரவு புகார் மனு அளித்தார்.

அதில் கூறி யிருப்பதாவது: திமுக-வின் அதீத ஆதரவாளராகச் செயல்பட்டு வரும் பொன்ராஜ் என்பவர், ஒட்டுமொத்த பெண்களை மிகவும் கீழ்த்தரமாக விமர்சித்து வருகிறார்.

ஆளும் கட்சியான திமுக தலைமையின் அரவணைப்பில் இருப்பதால் தன்னையாராலும் கட்டுப்படுத்த இயலாது என்ற நினைப்பில் அவர் எல்லை கடந்து அநாகரிகமாகப் பேசி வருகிறார்.

பெண்களை மிக மோசமாக பேசி வரும் பொன்ராஜ் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறிஉள்ளார்.

புகார் மனுவை பெற்றுக் கொண்ட சட்டம்-ஒழுங்கு கூடுதல் டிஜிபி மகேஷ்வர் தயாள், உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

நடிகர் விஜய்கட்சி ஆரம்பித்த பிறகு முதல் முறையாக டிஜிபி அலுவலகம் வரை நேரடியாக வந்து புகார் தெரிவித்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர், தவெக தலைமை நிர்வாக குழு ஒருங்கிணைப் பாளர் செங்கோட்டையன், செய்தியாளர்களிடம் கூறியதாவது: திமுக பின்புலம் திமுக-வின் ஆதரவோடு, அவர்களின் உறுதுணையோடு பெண்களை பொன்ராஜ் கேவலமாக இழிவுபடுத்தி பேசியிருப்பது பற்றி டிஜிபி அலுவலகத்துக்கு தவெக தலைவர் விஜய் நேரில் வந்து அவரே கையொப்பமிட்டு மனுவை வழங்கி இருக்கிறார்.

திமுக அவருக்கு ஆதரவாக இருக்கிறது என்ற காரணத்தின் அடிப்படையில்தான் இது போன்ற சொற்களை அவர் பேசியிருக்கிறார் என்பது மிகவும் கண்டிக்கக்கூடியது.

அவர் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்து இருக்கிறார்கள். இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை மக்கள் பார்த்துக் கொள்வார்கள்.

இவருக்கும் சகோதரிகள், தாய்-தந்தை இருக்கிறார்கள். இவற்றை மனதில் வைத்து அவர் பேசியிருக்க வேண்டும். அவர் எல்லைமீறி பேசியதற்குக் காரணம் திமுகவின் பின்புலமே என்பதைத் தவிர வேறு இல்லை.

எனவே, இவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டிஜிபியை நேரில் சந்தித்து விஜய் வலியுறுத்தி உள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தைச் சேர்ந்த 10 போலீஸ் அதிகாரிகளுக்கு ஐபிஎஸ் அந்தஸ்து




**சென்னை, மார்ச் 28:**

தமிழகத்தைச் சேர்ந்த 10 போலீஸ் அதிகாரிகள் ஐபிஎஸ் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. தமிழக காவல் துறையில் 3 கட்டங்களாக பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக 2-ம் நிலை காவலர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலமும், உதவி ஆணையர்கள் (டிஎஸ்பி) தமிழக அரசால் நடத்தப்படும் குரூப்-1 தேர்வு மூலமும், அடுத்த கட்டமாக மத்திய அரசு (யுபிஎஸ்சி தேர்வு) மூலமும் ஐபிஎஸ் அதிகாரிகளும் தேர்வு செய் யப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் குரூப்-1 தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பணி யமர்த்தப்படும் போலீஸாருக்கு பணிக் காலத்தின் அடிப்படையில் ஐபிஎஸ் அந்தஸ்து வழங்கப்படும்.

அந்த வகையில், துணை ஆணையர் மற்றும் எஸ்பி அந்தஸ்தில் தற்போது தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றி வரும் எஸ்.அரவிந்த், என்.ஸ்டீபன் ஜேசுபாதம், பி.தங்கதுரை, எஸ்.எஸ்.மகேஷ்வரன், வி.ஆர்.ஸ்ரீநிவாசன், டாக்டர் கே.பிரபாகர், சி.சியாமளா தேவி, எம்.கிங்ஸ்லின், வி.சியாமளா தேவி, டாக்டர் எல்.பாலாஜி சரவணன் ஆகிய 10 போலீஸ் அதிகாரிகளுக்கு ஐபிஎஸ் அந்தஸ்து வழங் கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மத்திய உள்துறை அமைச்சகம் பிறப்பித்துள்ளது.

# தமிழகத்தில் இதுவரை விதிகளை மீறி கொண்டு செல்லப்பட்ட ரூ.189 கோடி பணம், பொருட்கள் பறிமுதல்

**சென்னை, மார்ச் 28:**



தமிழகத்தில் இதுவரை விதிகளை மீறி கொண்டு செல்லப்பட்ட ரூ.189 கோடி மதிப்பிலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, நடத்தை விதிகளை அமல்படுத்தும் பணியில் தலா 2,106 பறக்கும் படைகள் மற்றும் நிலைக் கண்காணிப்பு குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன.

தமிழகத்தில் இதுவரை உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.189 கோடி மதிப்புள்ள பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் விதிமீறல் தொடர்பாக 'சி-விஜில்' (cVIGIL) செயலி மூலமாக மட்டும் 1,262 புகார்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றின் மீது உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 16 புகார்கள் மட்டும் நிலுவையில் உள்ளன.

தவெக தலைவர் விஜய் பிரச்சாரம் மேற்கொள்ள, அக்கட்சி சார்பில் அந்தந்த மாவட்டத் தேர்தல் அலுவலரிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

அசாம், மேற்கு வங்க மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல் பணிக்காக தமிழகத்தில் இருந்து ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் சென்றுள்ளனர்.

4 ஐபிஎஸ் அதிகாரிகள் காவல் பார்வையாளர்களாகவும், 42 ஐஏஎஸ் அதிகாரிகள் பொதுப் பார்வையாளர்களாகவும் வெளி மாநிலங்களுக்கு சென்றுள்ளனர்.

தமிழகத்தில் வேட்புமனு தாக்கல் 30-ம் தேதி தொடங்குகிறது.

அதன்பிறகு, பதற்றமான வாக்குச்சாவடிகள் குறித்த விவரங்கள் தெரியவரும். அந்த வாக்குச்சாவடிகளில் மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் கூடுதல் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுப்பார்கள். அங்கு வாக்குப்பதிவு நிகழ்வுகள் முழுவதும் நேரலை (வெப்காஸ்டிங்) செய்யப்படும்.

நடவடிக்கைகளைக் கண்காணிக்க நுண்பார்வையாளர்களும் நியமிக்கப்படுவார்கள். காஞ்சிபுரத்தில் திருமணத்துக்கு பட்டுச் சேலை வாங்குவதற்காக ஒரு பெண் வைத்திருந்த பணத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

# ஈரான் மீதான தாக்குதல் மேலும் 10 நாள்கள் நிறுத்தம்: அமெரிக்க அதிபர் டிரம்ப்

**வாஷிங்டன், மார்ச் 28:**

ட்ரூத் சோஷியல் சமூக ஊடகத்தில் வெள்ளிக்கிழமை (மார்ச் 27) வெளியிட்ட பதிவில், 'ஈரானிய அரசின் வேண்டுகோளை ஏற்று, எரிசக்தி நிலையங்கள் அழிப்பு நடவடிக்கைகளை திங்கள்கிழமை, ஏப். 6, 2026, இரவு 8 மணி வரை நான் நிறுத்திக்கொள்கிறேன்.

பேச்சுவார்த்தைதொடர்ந்து நடைபெறுகிறது. போலியான ஊடகச் செய்திகள் மற்றும் பிறரின் பொய்யான தகவல்களுக்கு மத்தியில், பேச்சுவார்த்தை நல்லபடியாக நடைபெறுகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் நாடுகளிடையே நடைபெற்றுவந்த போர், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் கடந்த திங்கள்கிழமை (மார்ச் 23) அறிவித்த நிலையில், மேலும் 10 நாள்களுக்கு அந்த முடிவு நேற்று நீட்டிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் 'ஒருதலைப்பட்ச' அமைதித் திட்டம் - ஈரான் நிராகரிப்பு: அமெரிக்கா முன்வைத்த அமைதித் திட்டம் 'ஒருதலைப்பட்சமானது மற்றும் நியாயமற்றது' என்று கூறி, ஈரான் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.



# வெளி மாவட்டத்தில் தேர்தல் பணி ஒதுக்கியதால் ஆசிரியர்கள் அதிர்ச்சி!



**தென்காசி, மார்ச் 28:** தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்.23-ம் தேதி நடைபெற உள்ள நிலையில், கோவில்பட்டி வட்டத்துக்கு உட்பட்ட பிள்ளையார்நத்தம், இளையரசனேந்தல் ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிகளைச் சேர்ந்த 40 ஆசிரியர்களுக்கு தென்காசி மாவட்டத்தில் தேர்தல் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான முதல் கட்ட பயிற்சி முகாம் சங்கரன் கோவில் கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நாளை (28-ம் தேதி) நடைபெற உள்ளது. வெளிமாவட்டங்களில் உள்ள தொகுதிகளில் பணி ஒதுக்கீடு பெற்றுள்ள ஆசிரியைகள் 3 கட்ட பயிற்சி வகுப்புகளுக்கு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு செல்ல வேண்டும்.

தொடர்ந்து ஏப்.22, 23-ம் தேதி தேர்தல் பணி செய்ய வேண்டும். வாக்குப்பதிவு இயந்திரம் எடுத்துச் செல்லும் வரை மையத்தில் காத்திருக்க வேண்டும். நள்ளிரவு நேரம் வந்து வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்துச் சென்றால், அதன் பின்னர் ஆசிரியைகள் வீடு திரும்புவதில் சிக்கல் ஏற்படும்.

எனவே, சொந்த மாவட்டங்களிலேயே உள்ள தொகுதிகளில் தேர்தல் பணி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து முன்னாள் ராணுவவீரர் அ.ஜெயப் பிரகாஷ் நாராயணசாமி கூறியதாவது: கடந்த நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவை தேர்தல்களில் ஆசிரியைகளுக்கு தூத்துக்குடி மாவட்ட வரம்புக் குள் தேர்தல் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு தேர்தல் பணி செய்தனர்.

தற்போது சட்டப்பேரவை தேர்தலில் பணி தென்காசி மாவட்ட வரம்புக்குள் இணைக்கப்பட்டு தேர்தல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியைகள் பயிற்சிக்காக சுமார் 40 கி.மீ. அலைய வேண்டும்.

எனவே, இதற்கு முன்பு தேர்தல் பணி ஒதுக்கீடு செய்தபடியே இந்தாண்டும் தூத்துக்குடி மாவட்ட வரம்புக்குள் தேர்தல் பணி வழங்க உரிய ஆவண செய்ய வேண்டும். தென்காசி மாவட்டத்தில் வாக்குச் சாவடி தலைமை அலுவலர் பொறுப்பு பள்ளி தலைமை ஆசிரியர்கள், முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஆனால், இந்த தேர்தலில் தென்காசி மாவட்டத்தில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், அரசு அலுவலக எழுத்தர்கள் உள்ளிட்டோருக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனை தென்காசி மாவட்ட தேர்தல் அதிகாரி விசாரித்து பணி ஒதுக்கீட்டைவரைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

இதற்கிடையே, இந்திய பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மா.கலை உடையார் தூத்துக்குடி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில்,, ''பிள்ளையார்நத்தம், இளையரசனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 40 ஆசிரியர்களுக்கு தென்காசி ஆட்சியரால் தேர்தல் பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டம் விட்டு மாவட்டம் தேர்தல் பணி யாற்றும் இந்த நிலை பள்ளி ஆசிரியர்களிடையே மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தூத்துக்குடி மாவட்டத்துக்குள் தேர்தல் பணியாணை வழங்க வேண்டும், என தெரிவித்துள்ளார்.

## IJK வேட்பாளர்கள் அறிவிப்பு




**சென்னை, மார்ச் 28:** தமிழக சட்டசபைக்கு அடுத்த மாதம் 23-ந்தேதி நடைபெற உள்ள தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய ஜனநாயக கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பல்லாவரம், குன்னம் ஆகிய தொகுதிகளில் இந்திய ஜனநாயக கட்சி போட்டியிடுகிறது.

இதனை தொடர்ந்து இந்திய ஜனநாயக கட்சி சார்பில் 2 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை பாரிவேந்தர் அறிவித்தார்.

அதன்படி, குன்னம் தொகுதியில் சரண்யா அன்பழகனும், பல்லாவரம் தொகுதியில் வழக்கறிஞர் வெங்கடேசனும் போட்டி யிடுகின்றனர். இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் எனக்கருதி புதியவர்களை வேட்பாளர்களாக நிறுத்தியதாக பாரிவேந்தர் கூறினார்.

இந்திய ஜனநாயக கட்சி வேட்பாளர்கள் இருவரும் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய தமிழகம் கட்சி தனித்து போட்டிகிருஷ்ணசாமி அறிவிப்பு



**சென்னை, மார்ச் 28:** வரும் சட்டமன்ற தேர்தலில் தனித்து போட்டியிட போவதாக புதிய தமிழகம் கட்சி அறிவித்துள்ளது. அ.தி.மு.க.விடம் கூட்டணி பேசி வந்த நிலையில் தனித்து போட்டியிட போவதாக அறிவிப்பு வெளியிட்டுள்ள கிருஷ்ணசாமி, புதிய தமிழகம் சார்பில் 60 முதல் 70 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் 29-ந்தேதி வெளியிடப்படும் என தெரிவித்துள்ளார்.

மேலும், ஒன்றுபட்டு நின்று நம்மை புறக்கணித்தவர்களை நாம்புறக்கணிப்போம். நெல்லை, தூத்துக்குடி, ராமநாதபுரம், தென்காசி மாவட்டங்களில் அதிக இடங்களில் போட்டியிட உள்ளதாக புதிய தமிழகம் கட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 சட்டமன்றத் தேர்தலில் தனித்தும், 2024 பாராளுமன்றத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் ஒரு தொகுதியிலும் போட்டியிட்டது கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏ.சி.சண்முகம் கட்சிக்கு ஒரு தொகுதி ஒதுக்கீடு



**சென்னை, மார்ச் 28:** தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் 26 நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களை அறிமுகம் செய்து தீவிர பிரசாரத்தில் சீமான் ஈடுபட்டு வருகிறார். இதனிடையே, கூட்டணி கட்சிகளுக்கு தொகுதிகளை ஒதுக்கீடு செய்து, தேர்தல் அறிக்கை மற்றும் முதற்கட்டமாக 23 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இதனிடையே, அ.தி.மு.க.வின் முழுமையான வேட்பாளர் பட்டியல் நேற்று வெளியாகின.

இந்த நிலையில், அ.தி.மு.க. கூட்டணியில் ஏ.சி. சண்முகத்தின் புதிய நீதி கட்சிக்கு மதுரை மத்திய தொகுதியை ஒதுக்கீடு செய்து ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

ஏ.சி.சண்முகம் மதுரை வடக்கு தொகுதியை கேட்டு வந்த நிலையில், மதுரை மத்திய தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதுரை மத்திய தொகுதியில் புதிய நீதி கட்சி வேட்பாளர் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்த தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சி பேருந்து சேவை



**சென்னை, மார்ச் 28:** சென்னை:சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சென்னையில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சி பேருந்து சேவையை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் நேற்று தொடங்கி வைத்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப் பேரவைத் தொகுதிகளில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" எனும் தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்து மற்றும் வாகனங்கள் சேவை தொடக்க விழா ரிப்பன் மாளிகை வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் பங்கேற்று விழிப்புணர்வு வாகன சேவையை கொடியசைத்து தொடங்கிவைத்தார். இந்த பேருந்து சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 தொகுதிகளிலும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் நிறுத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

## அ.ம.மு.க. வேட்பாளர் பட்டியல், தேர்தல் அறிக்கை - இன்று வெளியிடுகிறார் டி.டி.வி.தினகரன்




**சென்னை, மார்ச் 28:** அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் (என்.டி.ஏ.) அ.ம.மு.க. கட்சிக்கு 11 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சைதாப்பேட்டை, பூந்தமல்லி, மடத்துக்குளம், பெரியகுளம், மன்னார்குடி, திருவையாறு, காரைக்குடி, திருப்பத்தூர், நாங்குநேரி, ஒட்டப்பிடாரம், திருச்சி மேற்கு ஆகிய 11 தொகுதிகளில் அ.ம.மு.க. போட்டியிடுகிறது. இந்த தொகுதிகளில் போட்டியிட உள்ள அ.ம.மு.க. வேட்பாளர்கள் யார்- யார்? என்பதை கட்சியின் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் தேர்வு செய்துள்ளார்.

## மாணவிக்கு பாலியல் தொல்லை அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் பணியிடை நீக்கம்



**சென்னை, மார்ச் 28:** சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவி ஒருவர் நேற்று மாலை சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு நேரடியாக வந்து பரபரப்பு புகார் மனு ஒன்றை கொடுத்தார்.

அந்த புகார் மனுவில் 'பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் தனக்கு நேரடியாகவும், செல்போனில் பேசியும் பாலியல் தொல்லை கொடுக்கிறார் என்றும், விஷயத்தை வெளியில் சொன்னால் தொலைத்துவிடுவேன் என்று மிரட்டுவதாகவும் குறிப்பிட்டிருந்தார்'.

இச்சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், துணிச்சலாக வந்து புகார் அளித்த மாணவியை பாராட்டியும், பேராசிரியர் மீது நடவடிக்கை எடுக்க கோரியும் அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்த புகாரில் பேராசிரியர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மாணவிக்குசெல்போனிலும், நேரிலும் பாலியல் தொல்லை கொடுத்த பேராசியர் ஞானவேல் பாபு பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதனிடையே மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த பேராசிரியரை கைது செய்யக்கோரி அண்ணா பல்கலைக்கழகம் அருகே மாணவர் அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## அதிமுகவில் 127 வேட்பாளர்கள் அறிவிப்பு: 2-ம் கட்ட முழு பட்டியல்



**சென்னை, மார்ச் 28:** சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிடும் 2-ம் கட்ட வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ளார். அதில், 127 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் இடம் பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் ஏப்.23-ஆம் தேதி நடைபெறவிருக்கும் நிலையில், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக 27 தொகுதிகளில், பாமக 18 தொகுதிகளிலும், அமமுக 11 தொகுதிகளிலும், தமாகா 5 தொகுதிகளும் போட்டியிடுகின்றன.

அதிமுகவின் சார்பில் ஏற்கெனவே 23 பேர் கொண்ட முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தற்போது 127 தொகுதிகள் அடங்கிய 2-ம் கட்ட வேட்பாளர்களின் பட்டியலை அக்கட்சியில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். அதன் விவரம்:

1. கும்மிடிபூண்டி (1) - V. சுதாகர்
2. பொன்னேரி (தனி) (2)- சிறுணியம் P. பலராமன்
3. திருத்தணி (3) - திருத்தணி கோ. அரி
4. திருவள்ளூர் (4) - B.V. ரமணா
5. மாதவரம் (9) - மாதவரம் V. மூர்த்தி
6. திருவொற்றியூர் (10) - K. குப்பன்
7. ஸ்ரீபெரும்புதூர் (தனி) (29) - K. பழனி
8. தாம்பரம் (31) - சிட்லபாக்கம் ச. இராசேந்திரன்
9. செங்கல்பட்டு (32) - M. கஜா (எ) கஜேந்திரன்
10. செய்யூர் (தனி) (34) - E. ராஜசேகர்
11. மதுராந்தகம் (தனி) (35)- மரகதம் குமரவேல்
12. காஞ்சிபுரம் (37) - V. சோமசுந்தரம்
13. அரக்கோணம் (தனி) (38) - சு. ரவி
14. காட்பாடி (40) - V. ராமு
15. ஆற்காடு (42) - S.M சுகுமார்
16. வேலூர் (43) - S.R.K அப்பு
17. அணைக்கட்டு (44) - த. வேலழகன்
18. குடியாத்தம் (தனி) (46)- G. பரிதா புருஷோத்தமன்
19. வாணியம்பாடி (47) - G. செந்தில்குமார்
20. ஆம்பூர் (48) - R. வெங்கடேசன்
21. ஊத்தங்கரை (தனி) (51) - T.M. தமிழ்செல்வம்
22. பர்கூர் (52) - E.C. கோவிந்தராசன்
23. கிருஷ்ணகிரி (53) - K. அசோக்குமார்
24. ஓசூர் (55) - P. பாலகிருஷ்ண ரெட்டி
25. பாப்பிரெட்டிபட்டி (60) - மரகதம் வெற்றிவேல்
26. அரூர் (தனி) (61) - V. சம்பத்குமார்
27. செங்கம் (தனி) (62) - T.S. வேலு
28. கீழ்பென்னாத்தூர் (64) - எஸ். இராமச்சந்திரன்
29. ஆரணி (67) - L. ஜெயசுதா
30. செய்யார் (68) - முக்கூர் N. சுப்பிரமணியன்
31. வந்தவாசி (தனி) (69) - P. ராணி
32. திண்டிவனம் (தனி) (72) - P. அர்ஜூனன்
33. வானூர் (தனி) (73) - P. முருகன்
34. விழுப்புரம் (74) - K. விஜயா
35. திருக்கோயிலூர் (76) - S. பழனிசாமி
36. உளுந்தூர்பேட்டை (77) - இரா. குமரகுரு
37. சங்கராபுரம் (79) - R. ராகேஷ்
38. கள்ளக்குறிச்சி (தனி) (80) - ராஜீவ்காந்தி
39. கங்கவல்லி (தனி) (81) - A. நல்லதம்பி
40. ஆத்தூர் (தனி) (82) - A.P. ஜெயசங்கரன்
41. ஏற்காடு (எஸ்டி) (83) - P. உஷாராணி
42. ஓமலூர் (84) - R. மணி
43. மேட்டூர் (85) - G. வெங்கடாஜலம்
44. சங்ககிரி (87) - S. வெற்றிவேல்
45. சேலம் (தெற்கு) (90) - J. வினோத்
46. வீரபாண்டி (91) - டாக்டர் ஸ்ரீ பாலாஜி சுகுமார்
47. சேந்தமங்கலம் (எஸ்டி) (93) - C. சந்திரசேகரன்
48. நாமக்கல் (94) - ஸ்ரீதேவி P.S. மோகன்
49. பரமத்தி வேலூர் (95) - S.சேகர்
50. திருச்செங்கோடு (96) - R. சந்திரசேகர்
51. ஈரோடு (கிழக்கு) (98) - R. மனோகரன்
52. தாராபுரம் (தனி) (101) - P. சத்தியபாமா
53. காங்கயம் (102) - N.S.N. நடராஜ்
54. பெருந்துறை (103) - J.K (எ) S. ஜெயக்குமார்
55. அந்தியூர் (105) - P. ஹரிபாஸ்கர்
56. கோபிச்செட்டிப்பாளையம் (106) - V.B. பிரபு
57. பவானிசாகர் (தனி) (107) - A. பண்ணாரி
58. கூடலூர் (தனி) (109) - பொன். ஜெயசீலன்
59. குன்னூர் (110) -A. ராமு
60. மேட்டுப்பாளையம் (111) - O.K. சின்னராஜ்
61. திருப்பூர் (வடக்கு) (113) - M.S.M. ஆனந்தன்
62. பல்லடம் (115) - பல்லடம் K.P. பரமசிவம்
63. சூலூர் (116) - V.P. கந்தசாமி
64. கவுண்டம்பாளையம் (117) - P.R.S. அருண்குமார்
65. கோயம்புத்தூர் தெற்கு (120) - அம்மன் K. அர்ச்சுணன்
66. சிங்காநல்லூர் (121) - K.R. ஜெயராம்
67. கிணத்துக்கடவு (122) - செ. தாமோதரன்
68. பொள்ளாச்சி (123) - V. பொள்ளாச்சி ஜெயராமன்
69. வால்பாறை (தனி) (124) - D. லட்சுமண சிங்
70. உடுமலைப்பேட்டை (125) - உடுமலை K. ராதாகிருஷ்ணன்
71. பழனி (127) - K. ரவி மனோகரன்
72. ஆத்தூர் (129) - A. விஸ்வநாதன்
73. நிலக்கோட்டை (தனி) (130) - S. தேன்மொழி
74. வேடசந்தூர் (133) - V.P.B. பரமசிவம்
75. அரவக்குறிச்சி (134) - K. செல்வக்குமார்
76. கிருஷ்ணராயபுரம் (தனி) (136) - S. திவ்யா
77. குளித்தலை (137) - S. கருணாகரன்
78. மணப்பாறை (138) - P.L. விஜயகுமார்
79. ஸ்ரீரங்கம் (139) - R. மனோகரன்
80. திருச்சிராப்பள்ளி (கிழக்கு) (141) - க. ராஜசேகரன்
81. திருவெறும்பூர் (142) - ப. குமார்
82. லால்குடி (143) -M. லீமா ரோஸ்
83. முசிறி (145) - N. யோகநாதன்
84. துறையூர் (தனி) (146) - இ. சுரோஜா
85. பெரம்பலூர் (தனி) (147) - இளம்பைஇரா.தமிழ்ச்செல்வன்
86. நெய்வேலி (153) - சொரத்தூர் இரா. ராஜேந்திரன்
87. பண்ருட்டி (154) - K. மோகன்
88. கடலூர் (155) - M.C. சம்பத்
89. குறிஞ்சிப்பாடி (156) - A. புவனேந்திரன்
90. புவனகிரி (157) - ஆ. அருண்மொழிதேவன்
91. சிதம்பரம் (158) - K.A. பாண்டியன்
92. சீர்காழி (தனி) (160) - ம. சக்தி
93. பூம்புகார் (162) - S. பவுன்ராஜ்
94. நாகப்பட்டினம் (163) - தங்க. கதிரவன்
95. திருத்துறைப்பூண்டி (தனி) (166) - உ. பாலதண்டாயுதம்
96. திருவிடைமருதூர் (தனி) (170) - இளமதி சுப்ரமணியன்
97. பாபநாசம் (172) - D. சண்முகபிரபு
98. ஒரத்தநாடு (175) - M. சேகர்
99. பட்டுக்கோட்டை (176) - C.V. சேகர்
100. பேராவூரணி (177) - கோவி. இளங்கோ
101. திருமயம் (181) - P.K. வைரமுத்து
102. சிவகங்கை (186) - P.R. செந்தில்நாதன்
103. மேலூர் (188) - P. பெரியபுள்ளான் (எ) செல்வம்
104. மதுரை கிழக்கு (189) - மாங்குளம் K. மகேந்திரன்
105. சோழவந்தான் (தனி) (190) - கி. மாணிக்கம்
106. மதுரை வடக்கு (191) - P. சரவணன்
107. உசிலம்பட்டி (197) - I. மகேந்திரன்
108. ஆண்டிபட்டி (198) - A. லோகிராஜன்
109. போடிநாயக்கனூர் (200) - V.T. நாராயணசாமி
110. கம்பம் (201) - S.T.K. ஜக்கையன்
111. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி) (203) - M. சந்திரபிரபா
112. விருதுநகர் (206) - V.G. கணேசன்
113. அருப்புக்கோட்டை (207) -S. சேதுபதி
114. பரமக்குடி (தனி) (209) - S. முத்தையா
115. திருவாடானை (210) - கீர்த்திகா முனியசாமி
116. முதுகுளத்தூர் (212) - மலேசியா S. பாண்டி
117. விளாத்திகுளம் (213) - R.சத்யா
118. தூத்துக்குடி (214) - சி.த. செல்லப்பாண்டியன்
119. ஸ்ரீவைகுண்டம் (216) - S.P. சண்முகநாதன்
120. சங்கரன்கோவில் (தனி) (219) - திலிபன் ஜெய்சங்கர்
121. கடையநல்லூர் (221) - C. கிருஷ்ணமுரளி
122. தென்காசி (222) - S. செல்வமோகன்தாஸ்
123. ஆலங்குளம் (223) - K.R.P. பிரபாகரன்
124. திருநெல்வேலி (224) - தச்சை N. கணேசராஜா
125. அம்பாசமுத்திரம் (225) - இசக்கி சுப்பையா (எ) இ. சுப்பையா
126. பாளையங்கோட்டை (226) - S. சையது சுல்தான் சம்சுதீன்
127. கன்னியாகுமரி (229) - என். தளவாய்சுந்தரம்

## செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539

## ADVERTISE WITH US

CONTACT US 9438610756

## WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp: 7789941009, 9337501889

## PLOT SALE

- ORAGADAM 11L to 23L
- TAMBARAM 51L to 69L
- OMR 26L to 51L
- ECR 52L to 75L

9626777627

## Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided For successful business.

Contact Mr. Irudaya Raj Ph.9486634780

## Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889

www.vilambaram.com

## keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

INTERNSHIP & JOB OPPORTUNITIES MSW & M.Sc Psychology - Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

## ஆட்கள் தேவை

வார சம்பளத்திற்கு லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை

உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்

OMR பெருங்குடி சென்னை

Contact 9790979539

## WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office

NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY! Grab Your Future Investment Today!

Location: Just 6 KM Near Parandur New Airport

Price Details
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW! Contact: CT. Guruji Phone: 90031 32847

LIMITED PLOTS - BOOK NOW!

## WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact 9150989424

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.

we simplify shipping for your business

Our Services are ... Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.

# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.

+91 44 43570909 +91 96770 88843

info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

## just499 MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary, Unilevel, Matrix, Board, Generation, ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com

Phone/WhatsApp: 7789951009

Email: orderjust499@gmail.com

## Sri Manjal Mart

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com

7789951009

order@manjalmart.com

## CAR WASH SUPREME

SADHANA DEVI.K

Car Wash & Detailing

- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here

9840882711, 7200043675

Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.

## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

## அருள்தரும் தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

அற்புதமான ஆன்மிக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மிகத்தை அறியுங்கள்..

www.arultharumdeivam.com

## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact 8248951872

# கவிதை அரங்கம்!





தொலைவில்
நீ சென்றால்
தொலைந்தே
போகின்றேன்
நானும்
உன் நினைவில்

பல சொந்தங்கள்
உனக்கிருந்தாலும்
உன்னிதயத்தின்
சொந்தம்

நானாகமட்டுமேயிருக்க
வேண்டும்

விலகியபோதும்
உன் நேசம்
இணைத்தது
நம் இதயத்தை

துளியாய்
கலந்துவிட்டாய்
மன கடலில்

## வாழ்க்கை தத்துவம்...



தேவையில்லாதவர்களிடமும்
தகுதியில்லாதவர்களிடமும்
நாம் யார் என்பதை
நிரூபிக்காமல் இருப்பதே
சிறந்த புத்திசாலித்தனம்

எல்லாருக்கும் பிடிச்ச
மாதிரி வாழ முடியாது
யாருக்கும் பிடிக்கலேனும்
சாக முடியாது

சூழ்நிலையை ஏற்றுக்
கொள்வது தான்
அதை வெற்றி
கொள்வதற்கான
ஒரே வழி

கவலையுடன் உறங்கச்
செல்வது முதுகில்
சுமையைக் கட்டிகொண்டு
உறங்குவதாகும்


# தன் விருப்பிழைவு தவறா

இப்போது கண்ணாடி முன் கைகட்டி, மெய்மறந்து, கண் மூடி நின்றிருந்த கோகிலாவை, யுவராஜ் நமட்டு சிரிப்போடு பார்த்தான்." போதும். கண்ணாடியின் பாதரச பூச்சு மங்கி தேய்ந்து விடப்போகிறது. 'நீ பேரழகி தான் ' நான் ஒத்துக்கொண்டு பல வருடங்கள் ஆகி விட்டதே." என்று கிண்டலடித்தான். இன்று, வெகு வருடங்களாக ஆவலுடன் காத்திருந்து கிடைத்த உயர் பதவியில் பணிக்கு அறிக்கை செய்ய இருப்பதால்; வீணான சொல்லாடலை தவிர்க்க; யுவராஜின் கேலியை புறம் தள்ளினாள். கையில் இருந்த மல்லிகை சரத்தை தலையில் நேர்த்தியாக சூடிய கோகிலா, தனது புது புடவையின் கொசுவானை சரி செய்தவாறு மடிப்புகளை நீவி சீர் செய்தாள். ஆழ்ந்த சிவப்பு நிற கைக்கட்டு மதுரை சுங்கடி கைத்தறி புடவைக்கு பொருத்தமாக நான்கு விரல்கடையில் கருப்பு நிற கரையில் இரட்டை வரிசையில். தங்க நிற அன்னபட்சிகளின் வரிசைகள். ஏர்வையாக இருந்த கருப்பு தலைப்பிலும் ஐந்து வரிசைகளில் அன்னபட்சிகளின் கவர்ச்சியான அணிவகுப்பு. இந்தப் புடவையின் சுங்கடி வடிவை அவளே வடிவமைப்பு செய்து பிரத்தியேகமாக ஆர்டர் செய்து வாங்கியிருந்து; கூடுதல் சிறப்பு. புடவை அம்சமாக அமைந்திருந்ததில் கோகிலாவுக்கு அத்தனை மன நிறைவு. சேலைக்குப் பொருத்தமாக கருப்பில் ஒயின் சிவப்பு நிறத்தில் சிறு பூக்கள் அச்சடித்திருந்த கைப் பையை தோளில் மாட்டியவள்; முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் திரும்பி நின்று; தன்னைத்தானே ரசித்துக் கொண்டவள்; தற்படங்கள் பல எடுத்துக் கொண்டும் நிறைவடையாமல், "யுவா! உருப்படியாக என்னை ஒரு படம் எடுத்து தா" என்றாள்.

" ஏன் கோகிலா? உன்னிடம் எத்தனை புடவைகள் இருக்கு? ஒரு பிரமோஷனுக்கு இத்தனை செலவு செய்து புதிதாக புடவை வாங்கி வேண்டுமா; நீயே சொல்" என்றான்; அவளைப் படம் எடுத்தபடி.

"யுவா! எத்தனை வருட தாமதத்திற்குப் பிறகு இந்த பதவி உயர்வு எனக்கு கிடைத்துள்ளது; என்பதை எண்ணிப் பார்க்க மாட்டாயா? நீ இதை கொண்டாட வேண்டும்; என்று கூட நான் எதிர்பார்க்கவில்லை. என்னையே நான் வாழ்த்திக் கொள்ளும் முகந்தரமாக நான் ஏன், எனக்கு நானே ஒரு பரிசு கொடுத்துக் கொள்ளக் கூடாதா? இதில் தவறு என்ன உள்ளது ? என் மகிழ்ச்சியை நான் கொண்டாடுவது, எனக்கு நிறைவை அளிக்கிறது. என் போக்கில் என்னை இருக்க விடு. வீணே என் மூடைக் கெடுக்காதே." என்றதும்,யுவா அவள் சொல்வதில் உள்ள நியாயத்தை உணர்ந்து மௌனமானான்"

தன்னிழைவில் , தன் விழைவில், தன் விருப்பத்தில் தன் நிறைவுக்காக, தனக்குத்தானே பரிசு ஒன்றை கோகிலா கொடுத்துக் கொண்டது; சரிதானே! ஆண்கள் ஒரு வெற்றியை கொண்டாடும் முகமாக, ஏதேதோ செய்கிறார்கள். பெண்களுக்கு, இந்த சலுகை கூட இல்லையா,?



**சசிகலா விஸ்வநாதன்**

# தினம் ஒரு சமையல்



## குடம்புளி மீன் குழம்பு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1/2 கிலோ | -சங்கரா மீன் |
| 50 கிராம் | -சின்ன வெங்காயம் |
| 1 கொத்து | -கருவேப்பிலை |
| 2 பச்சை | -மிளகாய் |
| 2 துண்டு | -குடம்புளி |
| 1 டீஸ்பூன் | -வெந்தயம் |
| 1 டீஸ்பூன் | -கடுகு |
| சிறிதளவு | -பொடியாக நறுக்கிய பூண்டு |
| சிறிதளவு | -புரியாத நறுக்கிய இஞ்சி |
| 1டீ ஸ்பூன் | -மஞ்சள் தூள் |
| 2 டீஸ்பூன் | -மிளகாய்த்தூள் |
| 2 டீஸ்பூன் | -தனியாத்தூள் |
| 3 டீஸ்பூன் | -உப்பு |
| 75 கிராம் | -தேங்காய் பேஸ்ட் |

செய்முறை:



ஒரு தட்டில் நறுக்கிய சின்ன வெங்காயம் கருவேப்பிலை பூண்டு இஞ்சி குடம்புளி பச்சை மிளகாய் கடுகு வெந்தயம் மசாலா பொருட்களை ரெடியாக வைத்துக் கொள்ளவும்

இப்போது ஒரு மண் சட்டியை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய் சேர்த்து அதனுடன் கடுகு சீரகம் சேர்த்து பொரிந்ததும் அதில் சின்ன வெங்காயம் கருவேப்பிலை பச்சை மிளகாய் குடம்புளி சேர்க்கவும்


இப்போது அதில் மிளகாய்த்தூள் உப்பு மஞ்சள் தூள் தனியா தூள் சேர்த்து நன்றாக வதக்கிக் கொள்ளவும்

வதங்கிய பிறகு இப்போது அதில் தேங்காய் பேஸ்ட் மற்றும் தண்ணீர் சேர்த்து நன்றாக கொதிக்க வைக்கவும்

மீனை சுத்தம் செய்து வைத்துள்ளதை இப்போது குழம்பில் போட்டு ஐந்து நிமிடம் கொதிக்க வைக்கவும்

குடம்புளி மீன் குழம்பு தயார்

## வெட்டுக்காயப் பூண்டு பயன்கள்



வெட்டுக்காயப்பூண்டு மருத்துவ பயன்கள்

இரத்தத்தை உறைய வைக்கும் திறன் வெட்டுக்காயப்பூண்டு இலைச்சாற்றுக்கு இருப்பது உயர்நிலை மருத்துவ ஆய்வுகள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வெட்டுக்காயப்பூண்டு சிறுசெடி ஆகும். மென்மையான, அடர்த்தியான உரோமங்கள் கொண்ட தாவரம். 1மீ.வரை உயரமானவை, தரையோடு படர்ந்து, நுனிப்பகுதி மட்டும் நிமிர்ந்து வளர்ந்திருக்கும்.

இலைகள், எதிர் அடுக்கானவை, சொரசொரப்பானவை, ஈட்டி, முட்டை வடிவமானவை, இலைத்தாள் முழுமையானது. பூக்கள், தொகுப்பானவை, தலை போன்ற தோற்றத்துடன் கூடியவை (தாத்தா தலைப்பூ).

மலர்கள், மஞ்சள் நிறமானவை, பிளவுபட்ட நாக்கு போன்றவை. ஆண், பெண் மலர்கள் தனித்தனியாகவும், மற்றும் இருபால் மலர்களும் ஒரே பூங்கொத்தில் காணப்படும்.

காய்கள், வெடித்துச் சிதறும் தன்மையானவை. விதைகள், கருப்பானவை. சிறு மயிரிழை போன்ற உரோமங்களும் காணப்படும்.

சமவெளிகள், கடற்கரையோரங்கள், புதிய நிலங்களில் தீவிரமாகப் பரவுகின்றன. மலர்கள், மழைக்காலத்தில் அதிகமாகவும், கோடைகாலத்தில் குறைந்தும் காணப்படும்.

வெட்டுக்காயங்கள் குணமாக வெட்டுக்காயப்பூண்டு இலைகளைப் பச்சையாக அரைத்து, சாற்றைக் காயத்தின் மீது தடவி, இரத்தம் வருவது நின்ற பின்னர், அரைத்த இலைகளைப் பாதிக்கப்பட்ட இடத்தில் பரப்பி, கட்டுப்போட வேண்டும்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*12. தண்ணீயே இல்லாத கடல் எங்கே இருக்கு..?*

*விடை: வேறெங்க MAP -ல தான் இருக்கும்.*

*13. டன் கணக்கில் துணி துவைக்கும் இடம் எது.?*

*விடை: Washing(Ton) தான்.*

# சினிமா

## பிளாக்பஸ்டர் ஆகியுள்ள ஆடு 3 திரைப்படத்தின் வசூல்.. பாக்ஸ் ஆபிஸ் ரிப்போர்ட்



மலையாள திரையுலகில் இருந்து வெளிவரும் திரைப்படங்களுக்கு எப்போதுமே தனி வரவேற்பு உள்ளது. பிரேமலு, மஞ்சுமல் பாய்ஸ், மின்னல் முரளி, 2018, Eko போன்ற பல திரைப்படங்களை இதற்கு உதாரணமாக கூறலாம்.

அப்படி, கடந்த வாரம் வெளிவந்து ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று, பிளாக்பாஸ்டராகியுள்ள திரைப்படம்தான் ஆடு 3. ஜெயசூர்யா, விநாயகன் நடிப்பில் உருவான இப்படத்தை இயக்குநர் மிதுன் தாமஸ் இயக்கியிருந்தார்.

கடந்த வாரம் திரைக்கு வந்த இப்படம் விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், ஆடு 3 திரைப்படம் ஆறு நாட்களில் உலகளவில் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இப்படம் ஆறு நாட்களில் ரூ. 101 கோடிக்கும் மேல் பாக்ஸ் ஆபிஸில் வசூல் செய்துள்ளது. இனி வரும் நாட்களில் எவ்வளவு வசூல் செய்யும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



ரசிகர்களின் மனம் கவர்ந்த நாயகியான கியாரா அத்வானி தனது லேட்டஸ்ட் கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இதோ பாருங்க:

## நடிகையிடம் தவறான முறையில் நடந்துகொண்ட இயக்குநர்.. மோனாலிசா வேதனை

2024ஆம் ஆண்டு நடந்த மகா கும்பமேளாவில் கவனத்தை ஈர்த்து இணையத்தில் வைரலானவர் மோனாலிசா. இவர் தற்போது நடிகையாக களம் இறங்கியுள்ளார் என்பதை நாம் அறிவோம். இவரை முதன் முதலில் படத்தில் கதாநாயகியாக நடிக்க வைப்பதாக பாலிவுட் இயக்குநர் சனோஜ் மிஸ்ரா தெரிவித்தார்.

ஆனால், துணை நடிகை ஒருவர் தன்னிடம் அவர் தவறான முறையில் நடந்துகொண்டார் என அளித்த புகாரில் அவரை போலீஸ் கைது செய்து சிறையில் அடைத்தது. தனது முதல் பட இயக்குநர் சிறைக்கு சென்று விட்டார் என்பதால் மோனாலிசா திரை வாழ்க்கை என்ன ஆகும் என கேள்வி எழுந்த நிலையில், அதற்குள் அவருக்கு இன்னும் சில படங்களில் நடிக்க வாய்ப்பு வந்தது. இந்த நிலையில், நிகழ்ச்சி ஒன்றில் நடிகை மோனாலிசா பேசுகையில், படப்பிடிப்பு தளத்தில் தனக்கு நேர்ந்த கொடுமை மற்றும் அத்துமீறல் குறித்து கண்கலங்கி கோபமாக பேசியுள்ளார்.

அவர் கூறியதாவது, "நான் முதன் முதலில் நடிக்க கமிட் ஆனது சனோஜ் மிஸ்ரா படத்தில்தான். அந்த படத்தின் படப்பிடிப்பின் போது சனோஜ் மிஸ்ரா என்னிடத்தில் தவறாக நடந்து கொண்டார். அவர் எனது உடல் பாகங்களை தொட்டார். அப்போது எனது குடும்பத்தினர் படப்பிடிப்பு தளத்திற்கு வந்தனர். அவர்களின் கண் முன்னே அவர் அப்படி மோசமாக நடந்துகொண்டார்.

இது எல்லாம் எனக்கு பிடிக்கவில்லை, எப்படி ஏன் செய்கிறீர்கள் என கேட்டதற்கு, முதல் படம் என்றால் அப்படிதான் இருக்கும் என சகஜமாக பதில் கொடுத்தார். முதல் படம் என்றால் என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? முதல் படம் என்றால் தவறான முறையில் நடப்பீர்கள?" என கோபமாக கண்கலங்கி அழுது கொண்டே பேசினார். நடிகை மோனாலிசா இவ்வாறு பேசியது தற்போது இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

# தெய்வங்களின் குணமே கிரஹங்களின் குணம்!



சோதிட சாஸ்திரத்தில் கிரகங்களின் குணம் எந்த தெய்வத்தின் குணத்தை ஒத்துள்ளது என கண்டறிந்து, அந்த தெய்வத்தை அதிதேவதையாக உள்ளனர். ஒவ்வொரு தெய்வமும் ஒவ்வொரு கிரகத்திற்கு அதிதேவதை.

**சூரியன் சிவன்.** பரமனும், பார்வதியும் படியளப்பவர்கள் என்ற வழக்கு உண்டு. அதுபோலவே அனைத்திற்கும் மூலகாரணாய் சூரியன் இருக்கிறான். அவன் கொடைக்கு நிகரில்லை. உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் அவன் உதவியின்றி பிராணன் கிடைப்பதில்லை. ஆகவே சூரியன் சிவனானார்.

**சந்திரன் பார்வதி.** பரமன் மனைவி பார்வதி, சந்திரனுக்கு அதிதேவதை. பூமியை தாயைப் போல் குளிரூட்டும் கிரகம். சூரியனிடத்தில் வெப்பத்தை பெற்று குளிர்ந்த ஒளியாய் தந்து நீர் நிலைகளை பொங்க வைக்கும். இந்த இரண்டுகிரகங்களின் நிலை சாதகத்தில் நல்ல முறையில் இருந்தால், ஒரு ஜாதகர் தன் இன பந்துக்களுடன் இனிதே வாழ்வான் என்பது உறுதி.

**செவ்வாய் : சுப்ரமண்யர்.** ஜாதகத்தில் வீரத்திற்கு இன்றியமையாதது செவ்வாய் பலம். இரும்பு கிரகம். உடல் பலத்திற்கு இன்றியமையாதது செவ்வாயின் நிலை. வீரத்தில் சிறந்த தெய்வம் முருகன். சுக்குக்கு மிஞ்சிய வைத்தியமும் இல்லை சுப்பிரமணியருக்கு மிஞ்சி தெய்வமும் இல்லை என்பது பழமொழி. அசுரர்களை தேவர்களுக்காக வதம் செய்த தெய்வம் முருகன். ஆதலால் செவ்வாய்க்கு அதிதேவதை சுப்பிரமணியர்.

**புதன் : விஷ்ணு** ஒரே நேரத்தில் இருவேறு குணத்தைக் கொண்ட கிரகம். தற்சுழற்சி குறைவானது. தெய்வத்தில் இரு நிறம் கொண்ட தெய்வம் விஷ்ணு. அதுபோலவே ஒருபுறம் கடும் வெப்பமும் மறுபுறம் கடும் குளிரும் கொண்டது. எந்த கிரகத்தின் நேர்கோட்டில் 10 பாகைக்குள் உள்ளதோ அதன் குணத்தை பிரதிபலிக்க வல்லது. நியாயம் தவறாமல் கடமையை செய்வதற்கு இன்றியமையாதது இதன் நிலை.

**குரு: பிரம்மா,** தட்சிணாமூர்த்தி (குரு) ஜாதகத்தில் கல்வி, கேள்வி, கீர்த்திக்கு வழிவகுக்கும் கிரகம். தற்சுழற்சி அதிகம் உள்ளது. இருக்கும் இடத்தைவிட பார்க்கும் இடமே விருத்தியாகும். ஆசிரியர் போன்ற குணத்தை உடையது.

**சுக்ரன் : லக்ஷ்மி, இந்திரன்.** ஒரு ஜாதகத்தில மற்ற கிரகங்கள் நிலை கெட்டிருந்தாலும் அதை நிவர்த்தி செய்ய வல்ல கிரகம் சுக்ரன். களத்திர காரகன். லக்ஷ்மியை போல் ஐஸ்வர்யத்தை கொடுக்கக் கூடிய கிரகம். ராஜயோகத்தையும், சுகபோக வாழ்க்கையையும், மனைவி வழி சொத்து சேர்க்கையையும் மனைவியின் குண நலத்தையும் கொடுக்கும். 8ம் இடத்திற்கு உரிய கிரகம். இந்திரன் குணத்தைக் கொண்டது. மழைக்கு காரணமான குளிர்ந்த கிரகம்.

**சனி : எமன், சாஸ்தா** உஷ்ணத்தை பிரதிபலிக்கும் கிரகம். ஜாதகத்தில் சனியின் நிலையே மரணத்தின் வகையை நிர்ணயிக்கும். சனி 0 பாகையில் குளிர்ச்சியை கொடுக்கும். அதனால் சாஸ்தாவிற்கு நிகராக சொல்லப்பட்து. ஆனால் பார்வை உக்கிரமானது. கொடுப்பதிலும், அழிப்பதிலும் சனிக்கு நிகர் சனியே வேறு கிரகம் இல்லை (ஆயுள் காரகன்).

**ராகு: காளி, துர்கை** கருமாரியின் நிழல் கிரகம். சந்திரன் தவிர மற்ற கிரகங்கள் இதன் 0 பாகையில் சாதகத்தில் வரும்போது பலன் தருவது அரிது. கருமை நிறம் உடையது. ராகு, கேதுக்கு இடையில் மற்ற கிரகங்கள் உடைபட்டு விட்டால் கால சர்ப்ப யோகம், தோஷம் என்று கூறுவதுண்டு. சாதகனின் பிற்பட்ட காலங்களிலேயே பலன் கொடுக்கும். இளம் வயதில் அவதிகளை சந்திக்க நேரும். துஷ்ட குணத்துடன் கொடுக்க வல்ல கிரகம்.

**கேது : விநாயகர், சண்டிகேஸ்வரர்** ஞானத்தை கொடுக்கும் கிரகம். ஒரு ஜாதகன் பிறக்கும்போது 0 பாகை ஜன்மத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு சித்தியையும் முக்தியையும் கொடுக்கும். நீண்ட நேரம் ஓரிடத்தில் அசையாமலிருந்து பணி செய்வதில் வல்லமையைத் தரும். சோம்பல் சேர்ந்த திடீர் மாற்றத்தை தரவல்ல கிரகம். (நிழல் கிரகம்).

பணம் மட்டுமே வாழ்க்கையல்ல அதையும் தாண்டி மனிதன் அடைய வேண்டிய அனுபவங்கள் பல உள்ளன. மன நிம்மதி அன்பு தவம் தியானம் முதலிய குணங்கள் எல்லாம் பணத்தால் வருபவை அல்ல! எண்ணத்தில் கவனமாக இருந்தால் சொல்லும் செயலும் சரியாக இருக்கும் ... ஏனெனில் எண்ணத்தின் வெளிப்பாடே சொல்லும் செயலும் ...

முனைவர்
**இராம.வேதநாயகம்**

---

**தினம் ஒரு தலைவர்கள்**

# கான் அப்துல் கப்பார் கான் வரலாறு

பச்சா கான் என்றும் அழைக்கப்படும் கான் அப்துல் கஃபார் கான், இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர பிரச்சாரம் செய்த ஒரு பஷ்டூன் சுதந்திர ஆர்வலர் ஆவார். அமைதிவாதத்தில் அவர் கொண்டிருந்த பற்று மற்றும் மகாத்மா காந்தியுடனான நெருங்கிய தொடர்புக்காக, அவர் "எல்லை காந்தி" என்ற புனைப்பெயரைப் பெற்றார்.

அவர் 1929 ஆம் ஆண்டு குதாய் கித்மத்கர் ("கடவுளின் ஊழியர்கள்") இயக்கத்தை நிறுவினார். இந்த இயக்கத்தின் வெற்றி அவருக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திடமிருந்து கடுமையான ஒடுக்குமுறையைப் பெற்றுத் தந்தது, இந்திய சுதந்திரப் போராட்டத்தின் மோசமான அடக்குமுறைகளில் சிலவற்றையும் அவர்கள் அனுபவித்தனர் .

கான் அப்துல் கபார் கான் - ஆரம்ப ஆண்டுகள்
கான் அப்துல் கஃபார் கான், பிரிட்டிஷ் இந்தியாவின் பெஷாவர் பள்ளத்தாக்கில் உள்ள உத்மன்சாயில் இருந்து ஒரு வளமான நில உரிமையாளர் பஷ்டூன் குடும்பத்தில் 1890 பிப்ரவரி 6 அன்று பிறந்தார்.

1910 ஆம் ஆண்டு கான் தனது 20 வயதில் தனது சொந்த ஊரில் ஒரு மசூதிப் பள்ளியைத் திறந்தார். ஆனால் பிரிட்டிஷ் அதிகாரிகள் 1915 ஆம் ஆண்டு அவரது பள்ளியை வலுக்கட்டாயமாக மூடினர், ஏனெனில் அது பிரிட்டிஷ் எதிர்ப்பு நடவடிக்கைகளின் மையம் என்று அவர்கள் நம்பினர். கான் துரங்காசியைச் சேர்ந்த ஆர்வலர் ஹாஜி சாஹிப்பின் பஷ்டூன் சுதந்திர இயக்கத்தில் சேர்ந்தார் என்ற அடிப்படையில் அவர்களின் குற்றச்சாட்டு இருந்தது, அவர் தானே பிரிட்டிஷாருக்கு எதிராக பல ஸ்தாபன எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தூண்டுவதற்குப் பொறுப்பானவர்.

கான் அப்துல் கஃபர் கான் - குதாய் கித்மத்கர்
ஆரம்பத்தில், பச்சா கானின் குறிக்கோள், பஷ்டூன்களின் சமூக மேம்பாட்டை நோக்கிச் செல்வதாகும், ஏனெனில் கல்வியின் பற்றாக்குறை மற்றும் பல்வேறு பஷ்டூன் குடும்பங்களுக்கு இடையே பல நூற்றாண்டுகளாக நடந்த இரத்தக்களரி சண்டைகள் காரணமாக அவர்கள் பின்தங்கிய நிலையிலேயே இருப்பார்கள் என்பதை அவர் உணர்ந்திருந்தார். காலப்போக்கில், அவர் ஒன்றுபட்ட, சுதந்திரமான, மதச்சார்பற்ற இந்தியாவை உருவாக்குவதற்கு உழைத்தார். இந்த இலக்கை அடைய, அவர் 1920 களில் "சிவப்பு சட்டைகள்" (சுர்க் போஷ்) என்று பொதுவாக அழைக்கப்படும் குதாய் கித்மத்கர் ("கடவுளின் ஊழியர்கள்") ஐ நிறுவினார்.

குதாய் கித்மத்கர் 100,000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை ஆட்சேர்ப்பு செய்தது, அவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளை எதிர்ப்பதிலும், அவர்களின் கைகளில் இறப்பதிலும் பிரபலமானவர்கள். வேலைநிறுத்தங்கள், அரசியல் நடவடிக்கைகள் மற்றும் வன்முறையற்ற போராட்டங்கள் மூலம், இந்த அமைப்பு அதிக அரசியல் செல்வாக்கைப் பெற முடிந்தது மற்றும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் அரசியல் நிலப்பரப்பில் ஆதிக்கம் செலுத்தியது.



கான் அப்துல் கபார் கான் & பிரிவினை
இந்தியப் பிரிவினையை கான் கடுமையாக எதிர்த்தார் . அவர் முஸ்லிம் விரோதி என்று நம்பியதால், சில அரசியல்வாதிகளால் அவரது தாராளவாத நிலைப்பாட்டிற்காக அவர் தாக்கப்பட்டார். இதன் விளைவாக 1946 இல் பெஷாவரில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஜூன் 21, 1947 அன்று, பன்னுவில், பச்சா கான், குதாய் கித்மத்கர்கள், மாகாண சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற பழங்குடித் தலைவர்கள் அடங்கிய லோயா ஜிர்கா (பஷ்டூன் மொழியில் பிரமாண்டமான கூட்டம்) பிரிவினைக்கு ஏழு வாரங்களுக்கு முன்பு நடைபெற்றது. இந்த ஜிர்காவில், பன்னு தீர்மானம் அறிவிக்கப்பட்டது, அதில் பஷ்டூன் மக்களுக்கு பிரிட்டிஷ் இந்தியாவின் அனைத்து பஷ்டூன் பிரதேசங்களையும் உள்ளடக்கிய பஷ்டூனிஸ்தான் என்ற சுதந்திரமான மாநிலத்தை தேர்வு செய்ய ஒரு தேர்வு வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இனத்தின் அடிப்படையில் பகுதிகள் வழங்கப்பட்டால் பகுதித் திட்டத்தை அது கடுமையாக பாதிக்கும் என்பதால், ஆங்கிலேயர்கள் இந்தக் கோரிக்கையை பரிசீலிக்கக்கூட மறுத்துவிட்டனர்.

பிரிவினையைத் தவிர்ப்பதற்கான கடைசி முயற்சிகளை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மறுத்துவிட்டது, உதாரணமாக அமைச்சரவைத் திட்டத் திட்டம் மற்றும் ஜின்னாவுக்கு பிரதமர் பதவியை வழங்க காந்தியின் பரிந்துரை போன்றவை. இதன் காரணமாக, பச்சா கான் பாகிஸ்தான் மற்றும் இந்தியா இரண்டின் கைகளிலும் துரோகம் இழைக்கப்பட்டதாக உணர்ந்தார். அவர் மகாத்மா காந்தியிடமும் காங்கிரஸ் கட்சியிடமும் "நீங்கள் எங்களை ஓநாய்களிடம் தள்ளிவிட்டீர்கள்" என்று மறைமுகமாகக் கூறினார்.

கான் அப்துல் கபார் கான் - கைது மற்றும் நாடு கடத்தல்
பிப்ரவரி 23, 1948 அன்று பாகிஸ்தான் அரசியலமைப்பு சபையின் முதல் அமர்வில் அப்துல் கஃபார் கான் பாகிஸ்தான் தேசத்திற்கு தனது விசுவாசப் பிரமாணத்தை எடுத்துக் கொண்டார்.

புதிய அரசாங்கத்தை முழுமையாக ஆதரிப்பதாக அவர் உறுதியளித்தார், மேலும் கடந்த காலத்தில் பல தகராறுகளைக் கொண்டிருந்த தனது அரசியல் போட்டியாளரான முகமது அலி ஜின்னாவுடன் சமரசம் செய்ய முயன்றார். கராச்சியில் ஜின்னாவுடனான முதல் நேரடி சந்திப்பு நன்றாக நடந்தது, ஆனால் கைபர் பக்துன்வாவின் முதலமைச்சர் அப்துல் கயூம் கான் காஷ்மீரியின் வலியுறுத்தல் காரணமாக இரண்டாவது சந்திப்பு ஒருபோதும் நடக்கவில்லை. வாய்ப்பு கிடைத்தால் ஜின்னாவை கொலை செய்யும் எண்ணம் பச்சா கானுக்கு இருப்பதாக அப்துல் கயூம் வலியுறுத்தினார். பஷ்டூன்களிடையே பச்சா கானின் புகழ் குறித்து அப்துல் கயூம் அதிருப்தி அடைந்து அதைக் குறைமதிப்பிற்கு உட்படுத்த முயன்றதால், இது பெரும்பாலும் வதந்தியின் அடிப்படையில் கூறப்பட்ட குற்றச்சாட்டாக இருக்கலாம்.

பச்சா கான் பாகிஸ்தானின் முதல் தேசிய எதிர்க்கட்சியான பாகிஸ்தான் ஆசாத் கட்சியை மே 8, 1948 அன்று உருவாக்கினார். எதிர்க்கட்சி இயற்கையில் ஆக்கபூர்வமானதாகவும், அதன் சித்தாந்தத்தில் வகுப்புவாதமற்றதாகவும் இருக்கும்.

ஆனால் அவரது விசுவாசம் குறித்த சந்தேகம் தொடர்ந்து நீடித்தது, மேலும் அவர் 1948 முதல் 1954 வரை எந்த குற்றச்சாட்டும் இல்லாமல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

கான் அப்துல் கஃபார் கான் 1988 ஆம் ஆண்டு வீட்டுக் காவலில் இருந்தபோது பெஷாவரில் இறந்தார். அவர் ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத்தில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது இறுதிச் சடங்கில் 200,000 பேர் கலந்து கொண்டனர், மேலும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி முகமது நஜிபுல்லாவும் இதில் அடங்குவர். பஷ்டூன் ஒருங்கிணைப்பு கனவு அவரை விட நீண்ட காலம் நீடிக்கும் என்பதைக் குறிப்பதால் இது அடையாளமாக இருந்தது.

பஷ்டூன்கள் மத்தியில் அவருக்கு இருந்த நற்பெயர் அந்த அளவுக்கு இருந்ததால், ஆப்கானிஸ்தான் உள்நாட்டுப் போரில் இறுதிச் சடங்கு நடைபெற ஒரு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

கான் அப்துல் கபார் கானின் அரசியல் மரபு
சகோதரத்துவம் மற்றும் அகிம்சை கொள்கைகளின் அடிப்படையில் வாழ்வது என்ற செய்தியைப் பரப்பிய தலைவராக பச்சா கானின் அரசியல் மரபு பஷ்டூன்கள் மற்றும் நவீன இந்தியக் குடியரசில் உள்ளவர்களிடையே புகழ்பெற்றது. இருப்பினும், பாகிஸ்தானுக்குள், முஸ்லிம் லீக்கை விட அகில இந்திய காங்கிரஸுடனான அவரது தொடர்பு மற்றும் ஜின்னாவை எதிர்த்ததன் காரணமாக, சமூகத்தின் பெரும்பான்மையானவர்கள் அவரது உண்மையான விசுவாசத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளனர். குறிப்பாக, பச்சா கானின் மரணத்திற்குப் பிறகு பாகிஸ்தானில் அல்ல, ஆப்கானிஸ்தானில் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியதைத் தொடர்ந்து, அவரது தேசபக்தி எங்கே இருக்கிறது என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
சென்னை சனிக்கிழமை 28.03.2026

# எல்.பி.ஜி. வாயுவுடன் புதிய மங்களூர் துறைமுகம் வந்த சரக்கு கப்பல்

**புதுடெல்லி, மார்ச் 28:**

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. இதனை தொடர்ந்து ஈரான் நடத்தி வரும் பதிலடி தாக்குதல்களால் இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் அவற்றின் படை தளங்கள் அமைந்த வளைகுடா நாடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன.

இதன் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு சரக்கு கப்பல் செல்ல கூடிய முக்கிய ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. மீறி செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் காணப்படுகிறது. இதனால், பல்வேறு நாடுகளிலும் எரிபொருள் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு உள்ளிட்ட சிக்கல்கள் எழுந்துள்ளன. எனினும், பரஸ்பர நட்பு அடிப்படையில் இந்தியா உள்ளிட்ட நேசக்கரம் நீட்டிய நாடுகளுக்கு, கப்பல் போக்குவரத்துக்கான அனுமதியை ஈரான் அளித்து வருகிறது.

இந்நிலையில், எல்.பி.ஜி. வாயுவை சுமந்து கொண்டு அப்போலோ ஓசன் என்ற சரக்கு கப்பல் புதிய மங்களூர் துறைமுகத்திற்கு இன்று வந்தடைந்து உள்ளது. இதனால், சமையல் கியாஸ் சிலிண்டருக்கு தேவையான எல்.பி.ஜி. வாயு கிடைப்பதில் உள்ள சிக்கல் தளர்வடைந்து, வினியோகத்திற்கான பாதிப்பு குறைந்துள்ளது. வியட்நாம் கொடியுடன் பயணித்து வந்த அந்த கப்பல், புதிய மங்களூர் துறைமுகத்தில் பாதுகாப்புடன் நிறுத்தப்பட்டு உள்ளது.

ஏற்கனவே 92,712 டன் எல்.பி.ஜி.யுடன் ஷிவாலிக் மற்றும் நந்தாதேவி ஆகிய இரு கப்பல்கள், இந்தியாவின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சமீபத்தில் வந்து சேர்ந்தன. அவற்றுடன் ஜெக வசந்த் மற்றும் பைன் கியாஸ் ஆகிய இரு கப்பல்களும் 92,612.59 டன் எல்.பி.ஜி.யுடன் இந்தியாவை நோக்கி பயணித்து கொண்டிருக்கின்றன. .

# கேரள தேர்தல் களத்தில் 890 வேட்பாளர்கள்

**திருவனந்தபுரம், மார்ச் 28:**




கேரள சட்டப் பேரவைத் தேர்தலில் வேட்புமனுவை திரும்பப் பெறும் கால அவகாசம் வியாழக்கிழமையுடன் (மார்ச் 26) நிறைவடைந்த நிலையில், இறுதி வேட்பாளா பட்டியல் வெளியிடப்பட்டது. இதில், 890 வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

140 தொகுதிகளைக் கொண்ட கேரளத்தில் ஏப்.9-ஆம் தேதி ஒரே கட்டமாக பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த மாநிலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான ஆளும் இடதுசாரி ஜனநாயக முன்னணி தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வரும் முனைப்பில் களமிறங்கியுள்ளது. அதேநேரம், ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி களம் காண்கிறது. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் மோதுவதால் மும்முனைப் போட்டி நிலவுகிறது.

இத்தேர்தலையொட்டி வேட்புமனு தாக்கல் சில தினங்களுக்கு முன் நிறைவுற்றது. வேட்புமனுக்களை திரும்பப் பெறும் கால அவகாசம் வியாழக்கிழமையுடன் முடிந்த நிலையில், இறுதி வேட்பாளா பட்டியலை தோதல் ஆணையம் வெளியிட்டது.

மொத்தம் 2,125 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்த நிலையில், மனுக்கள் மீதான பரிசீலனை மற்றும் மனுக்களைத் திரும்பப் பெறும் நடைமுறைக்குப் பிறகு 890 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். கடந்த 2021 தேர்தலில் 957 பேர் களத்தில் இருந்தனர்.

கோழிக்கோடு மாவட்டம், கொடுவள்ளி தொகுதியில் அதிகபட்சமாக 13 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

2.71 கோடி மொத்த வாக்காளர்களில் அதிகபட்சமாக 40-49 வயதுக்குள்பட்டவர்கள் 56.32 லட்சம் பேர் உள்ளனர். மலப்புரம் மாவட்டத்தில் அதிகபட்சமாக 36 லட்சம் வாக்காளர்களும், வயநாடு மாவட்டத்தில் குறைந்தபட்சமாக 6.43 லட்சம் வாக்காளர்களும் உள்ளனர்.

# ‘வந்தே பாரத்’ ரெயிலில் விற்கப்பட்ட தயிர் பாக்கெட்டில் நெளிந்த புழு... ஒப்பந்தத்தை ரத்து செய்த ரெயில்வே

**புதுடெல்லி, மார்ச் 28:**

கடந்த மார்ச் 15-ந்தேதி, ‘வந்தே பாரத்’ ரெயிலில் பயணித்த ரித்தேஷ் சிங் என்பவருக்கு ரெயிலில் இரவு உணவுடன்சேர்த்துஒருதயிர் பாக்கெட் வழங்கப்பட்டுள்ளது. அந்த பாக்கெட்டைத் திறந்தபோது, அதற்குள் உயிருள்ள புழுக்கள் நெளிந்து கொண்டிருப்பதைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார்.

இந்நிலையில் ரித்தேஷ் சிங், உடனடியாக தனது ‘எக்ஸ்’ பக்கத்தில் இது குறித்து வீடியோ பதிவிட்டு, ஐ.ஆர்.சி.டி.சி., ரெயில்வே மந்திரி ஆகியோரை அதில் டேக் செய்திருந்தார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவிய நிலையில், இதில் தொடர்புடையவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலர் கோரிக்கை விடுத்து வந்தனர். இதைத் தொடர்ந்து ஐ.ஆர்.சி.டி.சி. நிர்வாகம், சம்பந்தப்பட்ட உணவு விற்பனை நிறுவனத்திற்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதித்தது. ஆனால் ஐ.ஆர்.சி.டி.சி. நிர்வாகத்தின் நடவடிக்கை திருப்திகரமாக இல்லை என்று கருதிய ரெயில்வே நிர்வாகம், சம்பந்தப்பட்ட உணவு விற்பனை நிறுவனத்திற்கான ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்ய ஐ.ஆர்.சி.டி.சி.க்கு அதிரடியாக உத்தரவிட்டது.

மேலும், அந்த நிறுவனத்திற்கு விதிக்கப்பட்ட அபராதத்தை 25 ஆயிரம் ரூபாயில் இருந்து 50 லட்சம் ரூபாயாக உயர்த்த ரெயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. அதோடு, சேவைகுறைபாடுகாரணமாக ஐ.ஆர்.சி.டி.சி. நிர்வாகத்திற்கு 10 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து ரெயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# உலக அமைதிக்காக 4,900 பேர் மகா ஆரத்தி எடுத்து கின்னஸ் சாதனை

**புனே, மார்ச் 28:**



மராட்டியத்தின் நாக்பூர் நகரில் ராம நவமி கொண்டாட்டங்கள் இன்று நடைபெற்றன. இதன் ஒரு பகுதியாக உலக அமைதியை வேண்டி மகா ஆரத்தி எடுக்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில், 4,900 பேர் கலந்து கொண்டு ஆரத்தி எடுத்து இறை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

ஓரிடத்தில் இந்த அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான மக்கள் ஒன்று கூடி ஆரத்தி எடுப்பது இதுவே முதன்முறையாகும். இதுபற்றி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மராட்டிய முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் கூறும்போது, இன்று கூட்டாக ஆரத்தி எடுத்து கின்னஸ் சாதனை படைக்கப்பட்டு உள்ளது.

ராம நவமியை முன்னிட்டு ஒரு புதிய சாதனை படைக்க வேண்டும் என திட்டமிட்டு, அதற்கான வேலையில் நம்முடைய எம்.எல்.ஏ. ஆஷிஷ் தேஷ்முக் செயல்பட்டார். இதுவரை 2,500 பேர் ஒன்றாக திரண்டு மகா ஆரத்தி எடுத்தது ஒரு சாதனையாக இருந்தது. ஆனால் இன்று, 4,900 பேர் ஒன்றாக திரண்டு, ஓரிடத்தில் கூடி மகா ஆரத்தி எடுத்து, ஒரு புதிய உலக சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்று விட்டனர் என மகிழ்ச்சியுடன் கூறினார்.

# பாஜகவுக்கு ரூ. 6,074 கோடி நன்கொடை! மற்ற கட்சிகளின் கூட்டுத் தொகையைவிட 10 மடங்கு அதிகம்!

**புதுடெல்லி, மார்ச் 28:**



கடந்த நிதியாண்டில் பாஜக ரூ. 6,074 கோடி நன்கொடை பெற்றிருப்பதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

நிதியாண்டு 2024 - 25இல் அரசியல் கட்சிகளின் நன்கொடை குறித்த விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்டுள்ளது.

தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் அறிக்கையின்படி, 2024 - 25 நிதியாண்டில் காங்கிரஸ், ஆம் ஆத்மி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய மக்கள் கட்சி (NPP) உள்ளிட்ட மற்ற 4 கட்சிகளின் மொத்த நன்கொடைகளைவிட, பாஜகவின் நன்கொடை சுமார் 10 மடங்கு அதிகமாகும். மேலும், 2023 - 24 நிதியாண்டில் பாஜகவின் ரூ. 2,243 கோடியைவிடவும் சுமார் 171 சதவிகிதம் அதிகம்.

2024 -25 நிதியாண்டில் தேசிய கட்சிகள், 11,343 நன்கொடைகள் மூலம் ரூ. 6,648.563 கோடியை நன்கொடையாகப் பெற்றுள்ளன.

இவற்றில் பாஜகவுக்கு 5,522 நன்கொடைகள் மூலம் மொத்தம் ரூ. 6,074.015 கோடியும், காங்கிரஸுக்கு 2,501 நன்கொடைகள் மூலம் ரூ. 517.394 கோடியும் பெற்றுள்ளன. 2023 -24 நிதியாண்டைவிட, 2024 25 நிதியாண்டில் 161 சதவிகிதம் அதிகரித்து, ரூ. 4,104.285 கோடி உயர்ந்துள்ளதாகவும் அறிக்கை கூறுகிறது.

தேசிய கட்சிகளுக்கு தில்லியிலிருந்து மொத்தம் ரூ. 2,639.481 கோடியும், மகாராஷ்டிரத்திலிருந்து ரூ. 2,438.86 கோடியும், குஜராத்திலிருந்து ரூ. 309.177 கோடியும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

# சோனியா காந்தி உடல்நிலையில் முன்னேற்றம்: டெல்லி மருத்துவமனை தகவல்

**புதுடெல்லி, மார்ச் 28:**

டெல்லி கங்கா ராம் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தியின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சோனியா காந்தி (79) காய்ச்சல் காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 10:22 மணியளவில் கங்கா ராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வானிலை யில் ஏற்பட்ட மாற்றமே அவரது உடல்நலக்குறைவுக்கு காரணம் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் கங்கா ராம் மருத்துவமனையின் தலை வர் டாக்டர் அஜய் ஸ்வரூப் நேற்று கூறுகையில், “கடந்த மார்ச் 24ம் தேதி இரவு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட சோனியா காந்திக்கு, உடலில் பரவியுள்ள நோய்த் தொற்றை கட்டுப்படுத்த ஆன்ட்டி பயாடிக் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சிகிச்சைக்கு அவர் சிறப் பாக ஒத்துழைத்து வருகிறார். அவரது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மூத்த மருத்துவர் கள் குழுவின் கண்காணிப்பில் அவர் இருந்து வருகிறார். அக்குழுவினர் அவரது உடல்நிலையை உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்” என்றார்.

# நாடு முழுவதும் ரூ.408 கோடி பறிமுதல்: தேர்தல் ஆணையம் தகவல்



**புதுடெல்லி, மார்ச் 28:**

தலைமை தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல் மற்றும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு ’மின்னணுப் பறிமுதல் மேலாண்மை அமைப்பு’ (ESMS) பிப்ரவரி 26-ம் தேதி செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த அமைப்பு செயல்பாட்டுக்கு வந்ததிலிருந்து, ரூ.17.44 கோடி ரொக்கம், ரூ.37.68 கோடி மதுபானங்கள் (16.3 லட்சம் லிட்டர்கள்), ரூ.167.38 கோடி மதிப்புள்ள போதைப்பொருட்கள், ரூ.23 கோடி மதிப்புள்ள விலைமதிப்புமிக்க உலோகங்கள் மற்றும் ரூ.163.30 கோடிக்கு அதிகமான பிற பொருட்கள் என ரூ.408.82 கோடி மதிப்புள்ள சட்டவிரோதப் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஒன்றாம் வகுப்பு சேர்க்கைக்கான வயது வரம்பில் மாற்றம்: கர்நாடக அரசு உத்தரவு

**புதுடெல்லி, மார்ச் 28:**

வரும் கல்வியாண்டில் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கை பெறுவதற்கு குழந்தைகளின் வயது ஜூன் 1ஆம் தேதி 6 வயது நிறைவடைந்திருக்க வேண்டும் என்ற விதிமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதாவது, சேர்க்கையில் 60 நாள்களை தளர்த்தியுள்ளது.


இதுகுறித்து கர்நாடக சட்டப் பேரவையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மது பங்காரப்பா வியாழக்கிழமை தாக்கல் செய்த அறிக்கை:

ஒன்றாம் வகுப்பில் சேர ஜூன் 1 ஆம் தேதி 6 வயதை நிறைவு செய்திருக்க வேண்டும் என்ற விதிமுறையை தளர்த்தும்படி நீண்ட நாள்களாக பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துவந்தனர். இதுதொடர்பாக கர்நாடக அரசிடம் கோரிக்கை மனுவும் அளிக்கப்பட்டது. இதை கருத்தில் கொண்டு, சேர்க்கைக்கான வயது வரம்பை 60 நாள்களுக்கு தளர்த்த கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது.

அதேபோல எல்.கே.ஜி., யூ.கே.ஜி. வகுப்புகளில் மாணவர்களை சேர்ப்பதிலும் சில சிக்கல்கள் உள்ளன. இந்த பிரச்னைக்கு தீர்வுகாண வெகுவிரைவில் புதிய சட்டம் கொண்டு வரப்படும். சேர்க்கைக்கான வயது வரம்பை 60 நாள்களுக்கு தளர்த்தியுள்ளது ஒன்றாம் வகுப்பு மட்டுமல்லாது எல்.கே.ஜி., யூ.கே.ஜி. வகுப்புகளுக்கும் பொருந்தும். சேர்க்கை விதிமுறைகளில் எல்.கே.ஜி. மற்றும் யூ.கே.ஜி. வகுப்புகள் இல்லை. எனவே, அந்த வகுப்புகளையும் சேர்க்கை வரம்புக்குள் கொண்டுவர புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்றார்.

# டெல்லியில் 459 கேஸ் சிலிண்டர்கள் பறிமுதல்

**புதுடெல்லி, மார்ச் 28:**



மேற்காசிய போர் நிலவரம் காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ள சூழலில், சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கு கட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு அவசரகால நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

வீட்டு உபயோக சிலிண்டருக்கு முன்னுரிமை அளித்தும், வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டருக்கும் கடுமையான கட்டுப்பாடுகளையும் விதித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. முக்கிய நேரத்தில் அமல்படுத்தப்படும் அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டத்தை (எஸ்மா) மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், டெல்லியின் புறநகர்ப் பகுதியான ரன்ஹோலா பகுதியில் எல்பிஜி சிலிண்டர்களைப் பதுக்கி வைத்து கள்ளச் சந்தையில் விற்றதாகக் கூறப்படும் எரிவாயு முகமை உரிமையாளர் (விநியோகஸ்தர்) மீது டெல்லி காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. நேற்று நடத்தப்பட்ட சோதனையின்போது 459 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டது. எச்.பி. பாலாஜி கேஸ் ஏஜென்சியின் உரிமையாளரான சுஷில் குமார் சிங்ஹால் என அடையாளம் காணப்பட்ட அந்த நபர், வர்த்தக எல்பிஜி சிலிண்டர்களை சட்டவிரோதமாக சேமித்து வைப்பதிலும் தவறாகப் பயன்படுத்துவதிலும் ஈடுபட்டது கண்டறியப்பட்டதாக காவல்துறை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எல்பிஜி தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்ற கவலைகளுக்கு மத்தியில், பெரிய அளவிலான பதுக்கல் குறித்த குறிப்பிட்ட உளவுத் தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கைஎடுக்கப்பட்டதாக காவல்துறை கூறியுள்ளது. "ரன்ஹோலாவில் உள்ள நிலோதி சாலையில் அமைந்துள்ள எரிவாயு ஏஜென்சியில் சோதனை நடத்தப்பட்டது. அங்கு இன்டேன் மற்றும் பாரத் பெட்ரோலியம் நிறுவனங்களுக்குச் சொந்தமான 459 காலி எல்பிஜி சிலிண்டர்கள் மீட்கப்பட்டன". கைப்பற்றப்பட்ட சிலிண்டர்களில் 284 இன்டேன் எரிவாயு சிலிண்டர்களும், 175 பாரத் பெட்ரோலியம் சிலிண்டர்களும் அடங்கும் என்று காவல்துறை தெரிவித்துள்ளது. மேலும், உரிய நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு உணவு வழங்கல் அதிகாரி சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டதாகவும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட சிலிண்டர்கள், பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின்படி ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கேஸ் நிறுவனத்தின் பிரதிநிதிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்தனர்.

# பிரதமர் மோடியை அவமதிக்கும் வகையில் ஏஐ வீடியோ: எக்ஸ் சமூக வலைதளம் மீது வழக்கு

**திருவனந்தபுரம், மார்ச் 28:**

பிரதமர் மோடி, தேர்தல் ஆணையத்தை அவமதிக்கும் வகையில் ஏஐ வீடியோ வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து எக்ஸ் சமூக வலைதளம் மீது கேரள சைபர் பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கேரளாவில் பிரதமர் மோடி, தலைமைத் தேர்தல் ஆணைய செயல்பாடுகளை அவமதிக்கும் விதமாக ஏஐ வீடியோ தயார் செய்யப்பட்டு அது எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வீடியோவானது பொதுமக்களைத் திசைதிருப்பவும், அரசியலமைப்பு அமைப்புகளின் நம்பகத்தன்மையைச் சீர்குலைக்கவும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கு பாதகமாகவும் இருப்பதாக கேரள சைபர் பிரிவு போலீஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து வீடியோ வெளியான எக்ஸ் சமூக வலைதள பயனாளர் லஷ்மி என் ராஜு, எக்ஸ் வலைதளம் மீது திருவனந்தபுரத்திலுள்ள சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# மக்கள்தொகை கணக்கெடுப்பு: முறையற்ற கேள்விகளை எழுப்பும் அலுவலருக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை!

**புதுடெல்லி, மார்ச் 28:**

‘2027 மக்கள்தொகை கணக்கெடுப்பின்போது மக்களின் மனதைப் புண்படுத்தக்கூடிய வகையில் முறையற்ற கேள்விகளை எழுப்பும் அலுவலருக்கு அதிகபட்சமாக 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்’ என்று இந்திய பதிவுத் துறைத் தலைவர் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக இந்திய பதிவுத் துறைத் தலைவரும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆணையருமான மிருத்யுஞ்ஜயகுமார் நாராயண் சார்பில் அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியின்போது உள்நோக்கத்துடன் மக்களின் மனதைப் புண்படுத்தக் கூடிய வகையில் முறையற்ற கேள்விகளை எழுப்பினாலோ அல்லது அறிந்தே ஏதாவது தவறான அறிக்கையை சமர்ப்பித்தாலோ அல்லது கணக்கெடுப்பின்போது பெறப்பட்ட தகவல்களை மத்திய அரசு அல்லது மாநில அரசின் முன் அனுமதி இன்றி வெளியிட்டாலோ மக்கள்தொகைகணக்கெடுப்பு சட்டப் பிரிவு 11-இன் கீழ் ரூ. 1,000 அபராதம் முதல் அதிபட்சமாக 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனை விதிக்கப்படும். மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியில் முறையாக ஈடுபடாமலும் அரசு உத்தரவுகளைப் பின்பற்றாமலும் அல்லது மற்ற அலுவலர்களின் பணிக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்படும் அலுவலர்களுக்கும் அதே தண்டனை விதிக்கப்படும்.

மேலும், சேகரிக்கப்பட்ட மக்கள்தொகைகணக்கெடுப்பு தரவுகளை சேதப்படுத்துகிற வகையில் அல்லது அழிக்கின்ற வகையில் நடந்துகொள்ளும் அல்லது மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிவுகளைத் திரித்தல் அல்லது சிதைக்கின்ற வகையில் செயல்படும் ஊழியர்களுக்கும் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வரும் 2027-ஆம் ஆண்டு பிப்ரவரியில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. முதன் முறையாக எண்ம முறையில் நடத்தப்படும் இந்த கணக்கெடுப்பில், மக்களின் ஜாதிவாரி விவரங்களும் சேகரிக்கப்பட உள்ளன. இந்தப் பணிக்காக ரூ. 11,718 கோடி ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.




## மதுரவாயலில் கப்பல் பொறியாளரை கொலை செய்து எரித்த 4 பேருக்கு ஆயுள் தண்டனை

**சென்னை, மார்ச்.28:** சென்னை, மதுரவாயலில் கப்பல் பொறியாளரை கொலை செய்து எரித்த 4 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. சென்னை, மதுரவாயலை சேர்ந்தவர் டில்லிபாபு என்ற வெங்கடேசன்(29).

கப்பல் துறையில் பொறியாளராக பணிபுரிந்து வந்த டில்லிபாபுவிடம், மதுரவாயல் கோகுல் என்ற கோகுலகிருஷ்ணன்(38), கடன் வாங்கி இருந்ததாக கூறப்படுகிறது. அந்த கடனை திருப்பி கொடுக்குமாறு கோகுலுக்கு, டில்லி பாபு நெருக்கடி கொடுத்து வந்துள்ளார்.

இதனை அறிந்த கோகுலின் நண்பர்களான மதுரவாயல் கார்மேகம் (38), பூபாலன் (32), ராஜ்குமார் (33), சுந்தரேசன் என்கிற சுந்தர் (32), கடந்த 2012-ம் ஆண்டு பிப். 6-ம் தேதி, காரில் சென்று கொண்டிருந்த டில்லிபாபுவை அவரது வீட்டின் அருகே கடத்தியுள்ளனர்.

பிறகு, கார்மேகம் உள்ளிட்ட 4 பேர், காரிலேயே டில்லிபாபுவை கொலை செய்து, திருவண்ணாமலை பகுதிக்கு உடலை எடுத்து சென்று எரித்துள்ளனர். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்த மதுரவாயல் போலீஸார், கோகுல், கார்மேகம் உள்ளிட்ட 5 பேரை கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை பூந்தமல்லியில் உள்ள கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் 3-ல் நடைபெற்று வந்தது. இதில், அரசு தரப்பில் வழக்கறிஞர் பாலமுருகன் ஆஜராகி வாதாடினார்.

முடிவுக்கு வந்த வழக்கு விசாரணையில் கார்மேகம், பூபாலன், ராஜ்குமார், சுந்தரேசன் ஆகிய 4 பேர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பை நேற்று பூந்தமல்லி, கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்- 3 நீதிபதி விஜயகுமார் அளித்தார். அதில் 4 பேருக்கு ஆயுள் தண்டனை, தலா ரூ.4,000அபராதம் விதிக்கப்பட்டது. கோகுல் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

## இரட்டை கொலை வழக்கில் தலைமறைவானவர் கைது

**சென்னை, மார்ச்.28:** இரட்டை கொலை வழக்கில் தலைமறைவாக இருந்தவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் உள்ள நாவலூர் குடியிருப்பில் வசித்து வந்த சுரேஷ் (24) மற்றும் கோட்டூர்புரம், சித்ரா நகரில் வசித்து வந்த அருண் (25) ஆகிய இருவரும் கடந்த ஆண்டு மார்ச் 16-ம் தேதி முன் விரோதம் காரணமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

இக்கொலை தொடர்பாக, கோட்டூர்புரம் போலீஸார் வழக்குப் பதிந்து கோட்டூர்புரத்தைச் சேர்ந்த மனோஜ் உட்பட 5-க்கும் மேற்பட்டோரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

வழக்கு விசாரணை சிங்காரவேலர் மாளிகை வளாகத்தில் உள்ள 16-வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், ஜாமீனில் வெளியே வந்த கரண் தலைமறைவானார். அவரை கைது செய்ய நீதிமன்றம் கடந்த மாதம் 23-ம் தேதி பிடியாணை பிறப்பித்தது.

இந்நிலையில், நங்கநல்லூரில் பதுங்கி இருந்த கரண் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

## வீடு தேடி கல்வி திட்டத்தின் கீழ் அரசு உதவி தொகை தருவதாக பெண்ணிடம் பணம் பறிப்பு




**சென்னை, மார்ச்.28:** வீடு தேடி கல்வி திட்டத்தின் கீழ், அரசு உதவித் தொகை தருவதாக, நூதன முறையில் பெண்ணிடம் பணம் பறிக்கப்பட்டது குறித்து போலீஸார் விசாரிக்கின்றனர்.

சென்னை, அபிராமபுரம், சேமியர்ஸ் சாலை பகுதியைச் சேர்ந்தவர் நாஸியா நிஷா. இந்நிலையில், கடந்த 23-ம் தேதி நாஸியாவை செல்போனில் தொடர்பு கொண்டு பேசிய அடையாளம் தெரியாத நபர் ஒருவர், உங்களது மகளுக்கு தமிழக அரசு வீடு தேடி கல்வி திட்டத்தின் கீழ், கல்லூரி உதவி தொகையாக ரூ.48,500 வந்துள்ளது.

30 நிமிடங்களில் அந்த பணம் உங்கள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என தெரிவித்துள்ளார். மேலும், அந்த பணம் உங்களது வங்கி கணக்கில் வரவு வைக்க நாங்கள் அனுப்பும் க்யூஆர் கோர்டை ஸ்கேன் செய்யுங்கள்.

பின்னர், நாங்கள் சொல்வதுபோல் அடுத்தடுத்து செயல்படுங்கள் என கூறி க்யூஆர் கோர்டை அனுப்பி வைத்துள்ளார்.

அதை ஸ்கேன் செய்த சிறிது நேரத்தில் நாஸியா நிஷா வங்கி கணக்கில் இருந்து ரூ.70 ஆயிரம் எடுக்கப்பட்டுள்ளதாக குறுந்தகவல் வந்துள்ளது.

இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த நாஸியா நிஷா, இது தொடர்பாக, அபிராமபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து நூதன முறையில் பணம் பறித்த நபரை தேடி வருகின்றனர்.

## பொன்னேரி அருகே கார் கவிழ்ந்த விபத்தில் சென்னை மாணவி உயிரிழப்பு!!

**சென்னை, மார்ச்.28:** பொன்னேரி அடுத்த தச்சூரில் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து கார் கவிழ்ந்த விபத்தில் சென்னையை சேர்ந்த கல்லூரி மாணவி திவ்யப் பிரியா (19) உயிரிழந்தார். காரில் மொத்தமாக 10 பேர் பயணித்த நிலையில் 9 பேருக்கு லேசான காயமடைந்தனர். சென்னையில் இருந்து தடா நீர்விழ்ச்சிக்கு சென்றபோது விபத்து ஏற்பட்டுள்ளது. சென்னை அரும்பாக்கத்தில் இருந்து கல்லூரியை சேர்ந்த 8 மாணவிகள் மற்றும் 2 மாணவர்கள் என 10 பேர் ஒரே காரில் இன்று காலை ஆந்திர மாநிலம் தடா நீர்வீழ்ச்சிக்கு புறப்பட்டனர்.

காரை மாணவர் ராஜமூர்த்தி ஓட்டிச்சென்றார். அந்த கார், பொன்னேரி அடுத்த தச்சூரில் சென்னை- கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் படுகாயம் அடைந்த காரில் பயணம் செய்த கல்லூரி மாணவி திவ்யப்பிரியா பரிதாபமாக உயிரிழந்தார். அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்த விபத்து குறித்து கவரைப்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மேம்பாடு தொடர்பாக ஐஐடி அறக்கட்டளை-ராணுவம் ஒப்பந்தம்




**சென்னை, மார்ச்.28:** பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மேம்பாடு தொடர்பாக, சென்னை ஐஐடி அறக்கட்டளையுடன், இந்திய ராணுவம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

பாதுகாப்பு தொழில்நுட்பங்களை மேம்படுத்துவது, ராணுவத் தொழில்நுட்பங்களில் வெளிநாடுகளை சார்ந்திருப்பதை குறைப்பது தொடர்பாக, சென்னை ஐஐடி பிரவர்தக் டெக்னாலஜீஸ் அறக்கட்டளையுடன், இந்திய ராணுவத்தின் எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் பிரிவு நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. பிரவர்தக் அறக்கட்டளையின் தலைமைச் செயல் அலுவலர் எம்.ஜெ.ஷங்கர் ராமன், இந்திய ராணுவத்தின் இஎம்இ பிரிவு கமாண்டிங் அதிகாரி மேஜர் ஜெனரல் லலித் கபூர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, ஆவடியில் ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.ஒப்பந்தம் குறித்து மேஜர் ஜெனரல் லலித் கபூர் கூறும்போது, "ஐஐடி பிரவர்தக் அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் ராணுவத்தின் இஎம்இ பிரிவு, ராணுவ நடவடிக்கைகளையும், ஆயுதங்களின் தரத்தையும் மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இதன்மூலம், பாதுகாப்பு தொழில்நுட்பங்களுக்கு வெளிநாடுகளைச் சார்ந்துள்ளதை கணிசமாக குறைக்க முடியும்" என்றார்.

ஐஐடி பிரவர்தக் அறக்கட்டளையின் வியூக ஆலோசகரும், தென்பிராந்திய ராணுவத்தின் முன்னாள் கமாண்டிங் அதிகாரியுமான லெப்டினென்ட் ஜெனரல் கரன் சிங் பிரார் கூறும்போது, "இந்த கூட்டு முயற்சி மூலம் கல்வி நிறுவனம் மற்றும் ராணுவத்தின் திறமைகளை ஒருங்கே பயன்படுத்த முடியும்" என்றார்.

## தமிழகத்தைச் சேர்ந்த 10 போலீஸ் அதிகாரிகளுக்கு ஐபிஎஸ் அந்தஸ்து




**சென்னை, மார்ச்.28:** தமிழகத்தைச் சேர்ந்த 10 போலீஸ் அதிகாரிகள் ஐபிஎஸ் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. தமிழக காவல் துறையில் 3 கட்டங்களாக பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக 2-ம் நிலை காவலர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலமும், உதவி ஆணையர்கள் (டிஎஸ்பி) தமிழக அரசால் நடத்தப்படும் குரூப்-1 தேர்வு மூலமும், அடுத்த கட்டமாக மத்திய அரசு (யுபிஎஸ்சி தேர்வு) மூலமும் ஐபிஎஸ் அதிகாரிகளும் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் குரூப்-1 தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படும் போலீஸாருக்கு பணிக் காலத்தின் அடிப்படையில் ஐபிஎஸ் அந்தஸ்து வழங்கப்படும்.

அந்த வகையில், துணை ஆணையர் மற்றும் எஸ்பி அந்தஸ்தில் தற்போது தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றி வரும் எஸ்.அரவிந்த், என்.ஸ்டீபன் ஜேசுபாதம், பி.தங்கதுரை, எஸ்.எஸ்.மகேஷ்வரன், வி.ஆர்.ஸ்ரீநிவாசன், டாக்டர் கே.பிரபாகர், சி.சியாமளா தேவி, எம்.கிங்ஸ்லின், வி.சியாமளா தேவி, டாக்டர் எல்.பாலாஜி சரவணன் ஆகிய 10 போலீஸ் அதிகாரிகளுக்கு ஐபிஎஸ் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மத்திய உள்துறை அமைச்சகம் பிறப்பித்துள்ளது.

## 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்த தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சி பேருந்து சேவை


**சென்னை, மார்ச்.28:** சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சென்னையில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சி பேருந்து சேவையை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் நேற்று தொடங்கி வைத்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" எனும் தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்து மற்றும் வாகனங்கள் சேவை தொடக்க விழா ரிப்பன் மாளிகை வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் பங்கேற்று விழிப்புணர்வு வாகன சேவையை கொடியசைத்து தொடங்கிவைத்தார். இந்த பேருந்து சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 தொகுதிகளிலும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் நிறுத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

நிகழ்ச்சியின் முடிவில் குமரகுருபரன் செய்தியாளர்களிடம் கூறும்போது, "தவெகவினர் வரும் மார்ச் 28-ம் தேதி பெரம்பூர் பகுதியில் 4, 5 இடங்களில் பிரச்சாரத்துக்கு அனுமதி கேட்டுள்ளனர்.

மக்கள் கூடும் இடங்கள் என்பதால் காவல்துறை ஆலோசனையுடன், விதிமுறைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்படும்" என்றார்.

## அடுக்குமாடி குடியிருப்புகளில் 15 வாக்குச்சாவடிகள்: அமைவிடங்களை அறிவித்தது தேர்தல் ஆணையம்



**சென்னை, மார்ச்.28:** தமிழகத்தில் நகர்ப்புறங்களில் அடுக்குமாடி குடியிருப்புகள் அதிகரித்து வருகின்றன. இது போன்ற குடியிருப்புகளில் வசிப்போர் சிலர் வாக்குச்சாவடிகளுக்கு சென்று வாக்களிக்க தயக்கம் காட்டுகின்றனர். பல இடங்களில் இது போன்ற குடியிருப்புகளில் 500-க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர்.

அங்கு ஒரு வாக்குச்சாவடி அமைக்கும் அளவுக்கு வாக்காளர்கள் இருப்பதால், இது போன்ற அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாக்குச்சாவடிகளை அமைக்க தேர்தல் ஆணையம் பல ஆண்டுகளாக ஆலோசித்து வந்தது.

அதன்படி திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுரை ஆகிய மாவட்டங்களில் இந்த தேர்தலில் 15 வாக்குச்சாவடிகளை தேர்தல் ஆணையம் அமைக்கிறது. அதன் அமைவிடங்களையும் தற்போது அறிவித்துள்ளது. அதன்படி, மதுரவாயல் தொகுதியில் நெற்குன்றத்தில் உள்ள ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் வசிக்கும் தாய்ஷா (TAISHA) அடுக்குமாடிக் குடியிருப்பிலும், அம்பத்தூர் தொகுதியில் கொரட்டூரில் உள்ள அலையன்ஸ் ஆர்கிட் ஸ்பிரிங்ஸ் குடியிருப்பில் 2 வாக்குச்சாவடிகளும், திருவொற்றியூர் தொகுதியில் எர்ணாவூரில் உள்ள வீட்டு வசதி வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒரு வாக்குச்சாவடியும் அமைக்கப்பட உள்ளன.


மேலும் சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் தண்டையார்பேட்டை இளைய தெருவில் உள்ள பிரின்ஸ் அபார்ட்மென்டில் 2 வாக்குச்சாவடிகள், வில்லிவாக்கம் தொகுதியில் திருமங்கலத்தில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளியில், விருகம்பாக்கம் தொகுதியில் கோயம்பேட்டில் உள்ள தெற்காசிய போட்டிகள் ஒருங்கிணைப்பாளர்கள் குடியிருப்பில் 2 வாக்குச்சாவடிகள், வேளச்சேரி தொகுதியில் டான்சி நகரில் உள்ள புனித ஆண்டனி தொடக்கப் பள்ளியிலும் வாக்குச்சாவடி அமைக்கப்பட உள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் மாங்காட்டில் உள்ள ஆதாம் குடியிருப்பு, கீழ்கதிர்ப்பூரில் உள்ள வீட்டுவசதித்துறை கட்டிடவளாகம் ஆகியவற்றில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. மேலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் கீரப்பாக்கத்தில் உள்ள நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் 2 வாக்குச் சாவடிகள், மதுரை மேற்கு தொகுதியில் கோச்சடை பகுதியில் உள்ள சாந்தி சதன் அடுக்குமாடிக் குடியிருப்பு ஆகிய 15 இடங்களில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட இருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

## தாராபுரத்தில் சுட்டெரிக்கும் வெயில் ஏடிஎம் ஏசி அறைக்குள் சூட்டை தணிக்க தூங்கிய தெருநாய்

**தாராபுரம், மார்ச்.28:** தாராபுரத்தில் ஏடிஎம் ஏசி அறைக்குள் தெருநாய் படுத்திருந்ததால் பணம் எடுக்க வந்த வாடிக்கையாளர் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். தாராபுரம் பொள்ளாச்சி சாலையில் நகராட்சி மேல்நிலைப் பள்ளி அருகே வங்கி ஏடிஎம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று மதியம் வாடிக்கையாளர் ஒருவர் ஏடிஎம்-க்குள் பணம் எடுக்க சென்றார். சென்றவேகத்தில் அவர் அலறியடித்து ஓடி வந்தார்.

அவர், பதற்றத்துடன் வருவதை பார்த்து அப்பகுதியில் உள்ளவர்கள் அவரிடம் விசாரித்தனர்.அப்போது, ஏடிஎம்-க்குள் தெருநாய் ஒன்று படுத்து தூங்கியது.



நாயை பார்த்ததும் பயத்தில் வெளியே ஓடி வந்தேன் என கூறினார். தொடர்ந்து தெருநாய் படுத்திருந்ததை வீடியோ எடுத்த இளைஞர்கள் வெயிலின் தாக்கத்தை தணிக்க ஏசி அறைக்குள் தெருநாய் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது என சமூக வலைதளங்களில் பதிவு செய்துள்ளனர். தற்போது, இந்த வீடியோ தாராபுரம் பகுதியில் வைரலாகி வருகிறது.

## தமிழக மீனவர்கள் 7 பேர் இலங்கை கடற்படையால் சிறைபிடிப்பு

**ராமேசுவரம், மார்ச்.28:** எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் பேரில் தமிழக மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படையினர் சிறை பிடித்தனர். ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து புதன்கிழமை சுமார் 400 விசைப்படகுகளில் 2 ஆயிரத்துக்கும்மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.

நெடுந்தீவு அருகே ராமேசுவரத்தைச் சேர்ந்த சசிக்குமார் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் புதன்கிழமை நள்ளிரவு மீன்பிடித்து கொண்டிருந்தபோது எல்லை தாண்டியதாக இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டனர்.

அதைத்தொடர்ந்து, படகிலிருந்த



ராமர் (38), வீரணன் (55), கருப்பையா (53) ஆபிரஹாம் (23 ஆகிய 4 மீனவர்களை கைது செய்து ஊர்காவல்துறை கடற்படை முகாமுக்கு இலங்கை கடற்படையினர் அழைத்துச் சென்றனர்.

மேலும் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த சிம்சன் என்பவருக்குச் சொந்தமான மீன்பிடி விசைப்படகின் பக்கவாட்டு பகுதியில் உள்ள மரப்பலகை உடைந்து கடல் நீர்படகுக்குள் புகுந்ததால், நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை நடுக்கடலில் மூழ்கியது.


படகில் இருந்த சீனிவாசன், செபஸ்தியான், சூசை வியாகுலம் ஆகிய 3 மீனவர்களும் கடலில் குதித்து ஐஸ் பெட்டி மற்றும் டீசல் கேன்களை பிடித்த வண்ணம் வெகுநேரமாக தத்தளித்து கொண்டிருந்தனர்.

இவர்களை இலங்கை கடற்படையினர் பத்திரமாக மீட்டு ஊர்காவல் துறை கடற்படை முகாமுக்கு கொண்டு வந்தனர்.

7 மீனவர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்றக் காவலில் யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.



மதுரை அருள்மிகு மீனாட்சி_சுந்தரேஸ்வரர்_ திருக்கோயில் பங்குனி கோடை_வசந்த உற்சவம் 2026- 26.03.2026-4ம் நாள் மாலை ஊஞ்சல் சேவை



காஞ்சி ஸ்ரீ வரதன் சன்னதி
பங்குனி உத்திரம் உற்சவம் முதல் நாள்
ஸ்ரீ மலையாள நாச்சியார் ஸ்ரீ பெருமாள் புறப்பாடு.





சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில்100சத வீத ஓட்டுப் பதிவை வலியு றுத்தி கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜாசிங் ஊர்வலத்தை துவங்கி வைத்தார். உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் கிருஷ்ணகுமார், தேர்தல் பிரிவு தாசில்தார் வினோத், மானாமதுரை இன்ஸ்பெக்டர் ரமேஷ் குமார் முன்னிலை வகித் தனர். மானாமதுரை அரசு கலைக்கல்லூரி மாணவ மாணவிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.



அருள்மிகு ப்ரீ ராமபத்திர பெருமாள் கோயில் பொரவச்சேரி ராமநவமி அபிஷேகம் ஆராதனை.

# மானாமதுரை சுந்தர விநாயகர் கோவிலில் ராமநவமி பூஜை

**மானாமதுரை , மார்ச்.28:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் பிரசித்தி பெற்ற ப்ரீ சுந்தர விநாயகர் கோவிலில் ராமநவமி பூஜை வழிபாடு நடைபெற்றது. இதில் ராமபிரான் அவதரித்த அயோத்தியில் இருந்து கொண்டு வந்த சிலையான ப்ரீ பாலராமர்க்கு சிறப்பு பூஜைகள் செய்து இதிகாசமான ராமாயண புராணம் புத்தகத்திற்க்கு பூஜை வழிபாடு நடைபெற்றது.


விழாவில் கலந்து கொண்ட ஏராளமான பக்தர்கள் அனைவருக்கும் கோவில் நிர்வாகி முன்னாள் ராணுவ வீரர் ராஜேந்திர பிரசாத் தமிழரசி தம்பதியர் அயோத்தி செந்தூரம், மற்றும் இருகைபிடி அளவு நெற்கதிர்கள் வழங்கினார்கள்.


சுவாமிக்கு பாயாசம் படைக்கப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

இக்கோவிலில் மாதந்தோறும் சங்கடஹர சதுர்த்தி வழிபாடு, அஷ்டமி, ஆஞ்சநேயர் மூல நட்சத்திரம் பூஜைகள் நடைபெறும்.









ஆஞ்சநேயருக்கு இங்கு பக்தர்கள் தங்கள் வேண்டுதலை கடிதம் எழுதி கொடுத்து வழிபாடு செய்து வருகின்றனர்.



சென்னை Dr. ஆர் கே நகர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தண்டையார்பேட்டை சென்னை.81 உள்ள N S S மாணவர்கள் மாணவிகள் சுமார் 60 பேர் தண்டையார்பேட்டையில் உள்ள திருவள்ளுவர் நகர் குடியிருப்போர் சங்கத்துடன் இணைந்து திருவள்ளுவர் நகரில் என் எஸ் எஸ் கேம்ப் நடத்துவதற்காக 24.03.26 அன்று காலை10.30. மணி அளவில் கல்லூரி வளாகத்தில் இருந்து கல்லூரி முதல்வர். Dr.D. லலிதா அவர்கள் கல்லூரி முதல் திருவள்ளுவர் நகர் வரை மாணவர்களின் அணிவகுப்பை துவக்கி வைத்தார்கள் அச்சமயம் திருவள்ளுவர் நகர் குடியிருப்போர் சங்க தலைவர் S.குணமணி, சங்க செயலாளர் திரு. D.கிறிஸ்டோபர் மற்றும் சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் அணிவகுப்பை முன் நின்று நடத்திச் சென்று NSS கேம்ப் இனிதே திருவள்ளுவர் நகரில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது இந்த கேம்ப் 24 ஆம் தேதி முதல் 30 ம் தேதி வரை இந்த நகரில் தூய்மை பணி, கல்வி விழிப்புணர்வு தூய்மை விழிப்புணர்வு, மரம் நடுதல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும், நிகழ்சிகள் ஏற்பாடுகள் NSS நிகழ்ச்சி அதிகாரி கல்லூரி பேராசிரியர். Dr. O.S.சரவணன் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது

# தவெக நிகழ்ச்சியில் நடனமாடிய அரசு பள்ளி தலைமை ஆசிரியை 'சஸ்பெண்ட்'



**சென்னை, மார்ச்.28:** தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் தவெக சார்பில் நடைபெற்ற மகளிர் தின விழாவில், திரைப்பட பாடலுக்கு நடனமாடிய அரசுப் பள்ளி தலைமை ஆசிரியை 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டுள்ளார்.

ஒரத்தநாடு அருகே உள்ள பின்னையூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கிருஷ்ணவேணி (58). இவர், சங்கரநாதர் குடிக்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார்.

மேலும், வெள்ளைத்தேவன் விடுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு பொறுப்பு தலைமை ஆசிரியையாகவும் இருந்தார்.

இந்நிலையில், ஒரத்தநாட்டில் தவெக சார்பில், கடந்த சில நாட்களுக்கு முன்பு மகளிர் தினவிழா கொண்டாடப்பட்டது. இதில் கலந்துகொண்ட கிருஷ்ணவேணி, மேடையில், விஜய் நடித்த சிவகாசி திரைப்படத்தில் இடம் பெற்ற, 'கோடம்பாக்கம் ஏரியா' என்ற பாடலுக்கு நடனமாடினார்.

இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகியது. இதுகுறித்து கல்வித்துறை அதிகாரிகளுக்கு சென்ற புகாரின் அடிப்படையில்,பட்டுக்கோட்டை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மதியழகன் விசாரணை நடத்தி, நன்னடத்தை விதியை மீறி, அரசியல் கட்சி விழாவில் கலந்துகொண்டு நடனமாடியதற்காக, கிருஷ்ணவேணியை 'சஸ்பெண்ட்' செய்து மார்ச் 24-ம் தேதி உத்தரவிட்டார்.

இதுகுறித்து தலைமை ஆசிரியை கிருஷ்ணவேணி கூறியதாவது:

நாங்கள் ஆண்டுதோறும் மகளிர் விழா நடத்துவது வழக்கம்.

அதேபோல, தவெக மகளிர் தினவிழா நடத்திய தனியார் மண்டபத்தில், அவர்களின் விழா முடிந்தவுடன், நாங்கள் ஏற்பாடு செய்த மகளிர் தின விழாவை நடத்தினோம்.

அப்போது, அங்கிருந்த தவெக பிளக்ஸ் பேனர் அகற்றப்படாமல் இருந்தது. நான் அதை அகற்றுமாறு கேட்டுகொண்டும் பேனரை அகற்ற நேரமாகும் என்பதால், விட்டு விட்டனர்.

இதனால், நான் தவெக நிகழ்ச்சியில் ஆடியதாக 'சஸ்பெண்ட்' செய்துள்ளனர். இதுதொடர்பாக எனது வழக்கறிஞரிடம் பேசி விளக்கம் அளிக்க உள்ளேன் என்றார்.

## அரசியல் கார்னர்

# தமாகா வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டார் ஜி.கே.வாசன்



**சென்னை, மார்ச்.28:** அதிமுக கூட்டணியில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு ஒட்டன்சத்திரம், ஈரோடு (மேற்கு), ராணிப்பேட்டை, கிள்ளியூர், கும்பகோணம் ஆகிய 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்ட நிலையில் அவற்றுக்கான வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் இன்று பகல் 12.12-க்கு வெளியிட்டார்.

அதன்படி, 1.ராணிப்பேட்டை (தொகுதி எண் 41) V.M. கார்த்திகேயன், மாவட்டத் தலைவர் - ராணிப்பேட்டை (மேற்கு) மாவட்டம் - தமிழ் மாநில காங்கிரஸ்(மூ)

2. ஈரோடு (மேற்கு) (தொகுதி எண் 99) M. யுவராஜா மாநில பொதுச்செயலாளர் - தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) - ஈரோடு மாவட்டம்

3. ஒட்டன்சத்திரம் (தொகுதி எண் 128) விடியல் S. சேகர் Ex. MLA - மாநில துணைத்தலைவர்- தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) ஈரோடு மாவட்டம்

4. கும்பகோணம் (தொகுதி எண் 171) M.K.R. அசோக்குமார் - மாநில செயலாளர் - தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) - கும்பகோணம் - தஞ்சாவூர் மாவட்டம்

5. கிள்ளியூர் (தொகுதி எண் 234) டாக்டர் J. நிவின் சைமன் - தென்மண்டல இளைஞர் அணி துணைத் தலைவர் - தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) - கன்னியாகுமரி மாவட்டம் போட்டியிடுகிறார்.

இந்த அறிவிப்புகளுக்கு முன்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஜி.கே.வாசன், வேட்பாளர் பட்டியலை நண்பகல் 12.12 மணிக்கு வெளியிடப் போவதாக் கூறினார். அதற்கான காரணம் குறித்து கேள்வி எழுப்பிய செய்தியாளர்களிடம், "ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு நம்பிக்கை இருக்கிறது. எங்கள் கட்சிக்கு உள்ள நம்பிக்கையை நாங்கள் பின்பற்றுகிறோம். அதுமட்டுமல்ல, அது நூற்றுக்கு நூறு நல்ல நேரம் என்று நான் நம்புகிறேன்" என தெரிவித்தார்.

# "நான் மற்றவர்களைப் போல அண்டா, குண்டா, மிக்ஸி எல்லாம் தரமாட்டேன்" – சீமான் பேச்சு




**சென்னை, மார்ச்.28:** "நான் மற்றவர்களைப் போல அண்டா, குண்டா, மிக்ஸி எல்லாம் நான் தரமாட்டேன். அதையெல்லாம் நீங்களே வாங்கிக்கொள்ளும்படி வேலையை தருகிறேன்" என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கள்ளக்குறிச்சியில் பேசும்போது, "வலிமை மிக்க ஆயுதம் வாக்கு; ஒற்றை வாக்கை உலகம் திரும்பிப் பார்க்க வைக்கும் வாக்காக மாற்ற முடியும். கருணாநிதி, ஜெயலலிதா, ஸ்டாலின், பழனிசாமி ஆட்சியை பார்த்துவிட்டீர்கள்; ஒருமுறை ஆட்சியை என்னிடம் தாருங்கள். நல்ல கல்வி, உலகத் தரம் வாய்ந்த மருத்துவம், தூய குடிநீரை இலவசமாக தருகிறேன்.

நான் ஆட்சிக்கு வந்த பிறகு மதுக்கடைகளை மூட முடியும், பாலியல் வன்கொடுமைகளை தடுத்திட முடியும், நீரை தேக்கி வைக்க முடியும். ஆனால் மறுபடியும் என்னால் மலைகளை, ஆற்று மணலை உருவாக்க முடியாது, ஏனென்றால் அது இயற்கையின் கொடை.

நான் மற்றவர்களைப் போல அண்டா, குண்டா, மிக்ஸி எல்லாம் நான் தரமாட்டேன். அதையெல்லாம் நீங்களே வாங்கிக்கொள்ளும்படி வேலையை தருகிறேன். அதற்கு சம்பளம் தருகிறேன். யார் கையையும் எதிர்பார்க்காமல் தன்மானத்தோடு வாழக்கூடிய தற்சார்பு வாழ்க்கையை உங்கள் பிள்ளையாகிய நான் தருவேன்.

இன்று ஒரு தொகுதிக்கு ரூ. 25 கோடி கொடுத்து, ஒருவருக்கு ரூ. 2000 கொடுக்கிறவன் தான் வேட்பாளர். அப்படி என்றால் ரூ.25 கோடி முதலீடு செய்கிறவன் லாபத் தேவைக்கு செய்கிறானா? மக்கள் சேவைக்கு செய்கிறானா? உங்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறவன், எப்படி உங்களுக்கு சேவை செய்வான் என்று எப்படி நம்புகிறீர்கள்? . கொஞ்சம் சிந்தித்து வாக்களியுங்கள்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டமன்றத் தேர்தலில் சாத்தூர் தொகுதியில் போட்டியிடுகிறேன்: நயினார் நாகேந்திரன்

**சென்னை, மார்ச்.28:** சட்டமன்றத் தேர்தலில் சாத்தூர் தொகுதியில் போட்டியிடுகிறேன் என பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார். அதிகாரப்பூர்வ வேட்பாளர் பட்டியல் வெளியாகாத நிலையில், சாத்தூர் தொகுதியில் போட்டியிடுவதாக தெரிவித்துள்ளார். 2021இல் நெல்லை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்றவர் நயினார் நாகேந்திரன். அதிமுக கூட்டணியில் பாஜகவிற்கு இந்த முறை நெல்லை தொகுதி ஒதுக்கப்படவில்லை

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: PAPERBOYNEWSPAPER@GMAIL.COM